1599

வருஷச் சந்தா ரூ. 1 8 0. ஸஞ்சிகை

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

'ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ'

(மாதப் பத்திரிகை.)

உல

தக்

கு... தி...— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,

கும் வைகுண்ட... (ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)

பாய்ந்திடச் செய்... ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால்

இம் மாதத்தில்தா... ப்ரசுரம் செய்யப்படுவது.

௧௯ ஸெப்டம்பர்-மீ [புரட்டாசி-மீ

விஷயம்.

1.	குறிப்புகள்	1—5
2.	திருவேங்கடமுடையான்	6—9
3.	ஸ்ரீதேசிகன் தேசிகத்வம்	10—11
4.	கவிஸிம்மத்தின் கவித்திறம்	11—13
5.	ஸ்ரீநஞ்ஜீயர் ஸ்ரீஸூக்தபாஷ்யம்	14—16
6	ஸுபாஷிதநீவீ [தொடர்ச்சி]	81—112

அறிவிப்பு.

சந்தாதாரர்கள் பாக்கியைத் தாமதமன்னியில் அவரவர்கள் சேர்ந்த ஆபீஸிற்கு அனுப்பவேணும். வருஷம் பிற்பாதி நடப்பதாலும், சந்தாவைக்கொண்டே ஸஞ்சிகைகள் வெளிவர வேண்டியிருப்பதாலும் இனித் தாமதம் கூடாது என்று அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீ கோதாஸ்துதி (தமிழ் உரையுடன்) விலை அணா 12

ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷணஸபை

ஷை கிளைசபை,
29, கிருஷ்ணபவனம், ெ

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ.

(ஓர் மாதப்பத்திரிகை)

ஸம்புடம் 3	ஈச்வர-ஸூ புரட்டாசி-மீ	ஸஞ்சிகை 9

ஜீவநம் ஜகதாம் ஜீயாத் திவ்யதம்பதிஸம்ச்ரயம் ।
ஸூக்தம் ஸர்வதந்த்ரஸ்ய வேங்கடேசாஹ்வயம் மஹ: ॥

OFFICE OF THE ...
3 SEP 193

குறிப்புகள்.

புரட்டாசி மாஸம்:—

இந்த மாஸத்தில் விசேஷதினங்கள் பல வருகின்றன. ... வான் பொல்லாக் குறளுருவாய் 'நிலம் மாவலி! மூவடி' என்று வஞ்சித்ததும் இம்மாதத்தில்தான். விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பில் திருவேங்கடமுடையானாக வந்தமர்ந்து, இப் புவியொடு ஈரேழுலகும் தனிக்கோல் செலுத்த ஆரம்பித்ததும் இம் மாதத்தில்தான். இத் திருவேங்கடமுடையானே தமது தீர்த்தோத்ஸவத்தில்,

"வேங்கடேசாவதாரோயம் தத்கண்டாம்சோ(அ)தவா பவேத் ।
யதீந்த்ராம்சோ(அ)தவேத்யேவம் விதர்க்யாயாஸ்து ஸத்குரு: "॥

என்று உலகத்தார் கொண்டாடவும், ப்ரபத்திசாஸ்த்ரத்தை உலகுக்களித்து, அந்தணரந்தியர் எல்லையில் நின்ற அனைத்துலகுக்கும் வைகுண்ட வானுலகுக்கு வழியினைக் காட்டி நரகங்கள் தூறு பாய்ந்திடச் செய்யவும் ஸ்ரீவேதாந்தாசிரியனாக வந்தவதரித்ததும் இம் மாதத்தில்தான். பின்னும்,

" கஈந்யாஜெ்யஷ்டாவதீணாய காருண்யாத்கஜோவஹதஃ ।
ஞூிவஸ்ண0கொவாவ்யதீந்த்ராயாஸ்து மஜூலு ",।

என்றும்,

, வெடாஜ்தெஶிகஸ்ஸாzயஶெவ0 தகுூராய ஜூலு '

என்றும்,

" வூூவூ0 யஸ்து ஊகாஜிதெவிஹநா ஸ்தெ
யஜுதாநொஜகஃ ஷூரவஶ்ரீ வாஷொக்த0 ரவித
வாஜநஜூ்டிஷாவநழ । ஸுவ்யா உகிதாஜூஜூரஶிவி
காஊக்ரு அயீவா8ர ஆநாஹீநி யயள வநஶூ விஜயீ
கணாடவிம்ஹாஸநழ " ॥

என்றும் பலபடியாகக் கொண்டாடப்படும் ஸ்ரீ ஆதிவண்சடகோப மஹாதேசிகனுக இவ்வுலகில் வந்தவதரித்ததும் இம்மாதத்தில் தான். 'திருக்குடந்தை தேசிகன்' என்றும் உலகத்தோரால் புகழப்படும் ஸ்ரீகோபாலார்யமஹாதேசிகன் அவதரித்ததும் இம்மாதத்திலேயேதான். இவ்வாறு சிறப்புற்ற இம் மாதத்திலேயே, "பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம் பரிமுகமாய் வந்தளித்த பரமனை" ஆராதனம் பண்ணும் ஸரஸ்வதிபூஜைதினமும் வருகின்றது. விஜபதசமியும் இம்மாதத்திலேதான் வருகின்றது.

' கவவாயிதயா கூுவெவ மாஜீூ விஜயஸ்தாநஶெவா
ஸ்ரீதொ வூஷாஜீழ '

என்று விஜயஸ்தானத்தில் வந்தமர்ந்த திருவேங்கடமுடையான் வந்தவதரித்ததாலும், இன்னும் 'முன்னாள் புணராத பரமதப்போர் பூரித்து வென்ற வென்றி புகழ்த் திருவேங்கடநாதனென்னும் குரு' வந்தவதரித்ததாலும் இத்தினத்திற்கு ' விஜபதசமி என்று பெரியோர் வைத்த பெயர்,

'ஜீஷீணாம் வநராஜூநாம் வாவஶெூzநயாவதி'

என்றகணக்கில் அர்த்தமுள்ளதாக ஆயிற்றென்பதுமிகையாகாது.

வாமன ஜயந்தி:— புரட்டாசி-மீ 1௳. வாமனஜயந்தியுடன் மாஸம் பிறக்கிறது. ஸ்ரீதேசிகனுடைய ஜந்மநக்ஷத்ரமான திருவோணத்திலேயே வாமனரும் அவதாரம் செய்தார். அன்று இவர் ஓங்கிவளர்ந்து தமது ஈரடியால் மூவுலகத்தையும் அளந்து தமது வசப்படுத்தியது, பின் ஸ்ரீதேசிகன் உபயபாஷைகளிலும் ' காஜொூந கஸ்ஸாநு மணயெஜோஸாநு ' என்றபடி எண்

8991 சென்னை-600 005

கடந்தவையாகவும், அபரமேயப்ரபாவமுள்ளவையாகவும் உள்ள க்ரந்தங்களை அருளிச்செய்து ஸமஸ்தலோகஜனங்களின் உள்ளங்களையும் கொள்ளப் போவதற்கோர் ஸூசகம்போலும்!

ஸ்ரீஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் அவதாரதினம்— புரட்டாசி மாஸம் 24௳. ' வ0ஶெ ஜாதஸ்விதாநவெ ' என்றபடி களங்கமற்ற உயர்ந்த குலத்தில் திருவேங்கடமுடையானுடைய திருவருளால் ஓர் புரட்டாசியில் வந்தவதரித்த இவ்வாசார்யவர்யரை "வேதாந்ததேசிகனே யிவர்" என்று பலரும் கொண்டாடா நிற்பர். ஸ்ரீதேசிகனைப்போலவே இவரும் வி0ஶத்யெூ விஶுதநாநாவியவிஜூராய், பரிமுகப் பரமனது அநுக்ரஹம் பெற்ற அவரைப்போலவே அரிமுகனுகிய அச்சுதனது அனுக்ரஹத்தைப் பெற்று அவரைப்போலவே திவ்யதேச யாத்ரைகளைச் செய்து, பரோக்ஷமான பரமபதத்துக்கு அவர் இட்ட ஸோபானம்போலின்றி ப்ரத்யக்ஷத்தில் திண்ணமிது வீடென்னத் திகழும் திருமலைக்கு ஸோபானம் கட்டி, அதிலேறி அனைவரும் 'பிணங்கியமரர் பிதற்றும் குணங்கெழு கொள்கையினனை' வணங்கி, அங்கு வந்து நிறைந்துள்ள விண்ணவர்கள் சூழாங்களுடன் வேதம்பாடிப் பண்ணுலகில் படியாத இசையால் பாடும் பல்லாண்டே பல்லாண்டும் பாடும்பெருமையை நம்போன்றவருக்குத் தந்து, இன்னும் இத்தகைய ஆயிரக் கணக்கான உபகாரங்களையும் செய்திருக்கிறார். இவர் திருநாமத்திலுள்ள ஆதி சப்தம் ஸ்ரீ ஆதிப்பிரான் தமது திருநாமமாகிய ஆதிசப்தத்தை இவருக்குப் பாரிதோஷிகமாக அளித்ததாகும். இவ்வாதிசப்தம் ஆதிசங்கராசார்யர் என்பதில்போல் 'முதல்' என்னும் அர்த்தத்தைக் குறிப்பதாக ஒருவர் விமர்சம் செய்துள்ளார். ஸம்ப்ரதாயத்தை அறியாத புறச்சமயிகளுடைய விமர்சத்தின் அழகு சாலச் சிறந்ததே!!

திருக்குடந்தை தேசிகன் அவதாரதினம்— புரட்டாசிமீ 26௳.

திருக்குடந்தை தேசிகன், அப்புள்ளாரின் திருவம்சத்தில் அவதரித்த ஸ்ரீகிருஷ்ணதேசிகனுக்குத் திருக்குமாரராய் புரட்டாசி மாதத்தில் பூராடநக்ஷத்ரத்தில் அவதரித்தார்; 'ஸாக்ஷாத் ஸ்வாமி (உடையவர்)' என்று எல்லாராலும் கொண்டாடப்பட்டவரும், ஜ்ஞானம் அநுஷ்டானம் வைராக்யம் இவைகளுக்கு ஓரே இடமானவரும், திருவாறுயிரப்படிக்கு இருபத்திநாலாயிரப்படி என்னும் அழகிய வ்யாக்கியானம் அருளிச் செய்தவருமான

ஸ்ரீவேதாந்தராமாநுஜமஹாதேசிகனிடத்தில் ஆச்ரயித்தார்; உலகோர் உய்ய உத்தரஸாராஸ்வாதினி, கண்ணுநுண் சிறுத்தாம்பு வியாக்கியானம், ஆன்ஹிகம் முதலான உயரிய கிரந்தங்களை அருளிச்செய்தார்; ஸ்ரீதேசிகன் ஸம்ப்ரதாயத்தை அனேக ஸச்சிஷ்யர்களுக்கு உபதேசித்துச் சாகோபசாகமாகப் பரவச்செய்தார். இப்படிப் பெரும்புகழ் படைத்த இந்த ஸ்வாமியை ' த்ரய்யந்ததேசிக யதீந்த்ர சடாரி மூர்த்திம் '' என்கிறபடி ஆழ்வார் எம்பெருமானார் ஸ்ரீதேசிகன் இவர்கள் சேர்ந்து அவதரித்தார்களோ என்று அக்காலத்திலுள்ள அகிலரும் அபிநந்தனம் பண்ணிப் போந்தார்கள்.

ஸரஸ்வதீபூஜை— (ஹயக்ரீவ ஆராதனம்) புரட்டாசி-மீ 27வ.

விஜயதசமி— புரட்டாசிமீ- 28வ.

ஸ்ரீதேசிகன் அவதார தினம்— புரட்டாசி-மீ 28-வ. பகவானுடைய பெருமை அளவிறந்தது. இவருடைய பெருமையை 'உயர்வற வுயர்நலமுடையவனென்றும் அயர்வறுமமரர்கள் அதிபதியென்றும் வர்ணிக்கப் புகுந்த ஆழ்வார்

" ஈசன் வானவர்க்கு என்பன் என்றால் அது
தேசமோ திருவேங்கடத்தானுக்கு "

ஆதலால் இவர் பெருமையை அளவிடவியலாது என்று திரும்பினார். இவர் திரும்பியதில் விந்தையொன்றும் இல்லை. ஏன் ! இவர் வேதந் தமிழ் செய்த மாறனே யாவார். இவருடைய திருவாய்மொழி வேதங்களின் ஸாரமேயாகும். வேதங்களுக்குத்தான் எம்பெருமான் எட்டினானோ ? இல்லையே ! அவன் பெருமையைக் கணக்கிடப் புகுந்த வேதங்கள் ஆனந்தமாகிய ஒரு குணத்தையும் அறியமாட்டாமல் எம்பெருமானை அறியும் விஷயத்தில் " கொஜ்ஜதாரணக்ஷாமயொவிசேஷ: " என்ற கணக்கில் நாட்டாரோடு வாசியற நிற்கவில்லையோ ?

"இத்துணைப் பெருமை வாய்ந்த நான்மறைக்கும் தேவர் அறிவிற்கும் பிறர்க்குமெட்டாச் செங்கண்மாலு"க்கும்,

" அலையற்ற வாரமுதக்கடல், அக்கடலுண்ட முகில்,
விலையற்ற நன்மணி வெற்பு, வெயில் நிலவோங்கும் பகல் "

என்பவற்றைச் சற்றே உவமையாகக் கூறுவார்கள். ஆனால் அவன் திருவடியையே வணங்கியெழும் பரமைகாந்திகளுக்கு ஸத்ருசமாக எண்ணுவதற்கும் ஏதுமில்லை. இவ்வாறு மனிசர்க்குத் தேவர்

போலத் தேவர்க்கும் தேவனாகிய செங்கண்மாலுக்கும், " ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம் " என்றபடி இவனுக்கும் உயிர்போன்ற பரமைகாந்திகளுக்கும் உள்ள வாசி இப்பரமைகாந்திகளுக்கும் நமது ஆசார்யர்களுக்கும் இருக்கும்.

இவ்வாசார்யர்கள் நமக்குச் செய்துள்ள வுபகாரத்தை,

" பரக்கும் புகழ்வரும் பைம்பொருள் வாய்த்திடும் பத்தர்களாய்
இரக்கின்றவர்க் கிவை யீந்தாலறமுள தென்றியம்பார்,
கரக்குங் கருத்துடைத் தேசிகர் கன்றென நம்மை யெண்ணிச்
சுரக்கும் சுரபிகள்போற் சொரிகின்றனர் சொல்லமுதே "

என்றும்,

" ஏற்றி மனத்தெழில் ஞானவிளக்கை யிருளனைத்தும்
மாற்றினவர்க்கொரு கைம்மாறு மாயனுங் காணகில்லான்
போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்கு புகழ்ச்
சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே"

என்றும், இத்தகைய பல்வேறு பாசுரங்களிலும் நமது ஆசார்யரத்னமாகிய ஸ்ரீதேசிகன் ஸங்க்ரஹித்துத் தந்திருக்கிறார்.

இவ்வாசார்யபங்க்தியிலும் ஒத்தாரும் மிக்காரும் இலராய்,

" ஆரொப்பார் இவர் குணங்களனைத்துங் கண்டால்
அருளாளர் தாமெனினும் தமக்கொவ்வாரே "

என்று இவர் பேரருளாளரை அனுபவித்தபடி தாமேயுந் தமக்கொவ்வாத் தன்மையராய் எழுந்தருளியிருப்பவர் நம் வேதாந்ததேசிகராம் வள்ளல்.

" ....இரவி யென்பான்
தன் புகழ்க் கற்றை மற்றை யொளிகளைத்தவிர்க்குமாபோல்"

இவருடைய பெருமை மற்றைய ஆசார்யர்களுடைய பெருமையையும் விஞ்சிக் கிடக்கின்றது.

வேதே ஸஞ்ஜாதகேதே முநிஜநவசநே ப்ராப்தநித்யாவமாநே ஸங்கீர்ணே ஸர்வவர்ணே ஸதி ததநுகுணே நிஷ்ப்ரமாணே புராணே | மாயாவாதே ஸமோதே கலிகலுஷவசாத் சூந்யவாதேऽவிவாதே தர்மத்ராணாய யோऽபூத் ஸ ஜயது பகவாந் விஷ்ணுகண்டாவதார: ||

ஸ்ரீ:

திருவேங்கடமுடையான்.

ஸ்ரீதேசிகனை நம்து ஆசார்யர்கள் ஸாக்ஷாத் பகவானுடைய அவதாரம் என்று கொண்டாடா நிற்பர். ஸ்ரீகுமாரதேசிகனாகிய நயினாராசார்யர் ஸ்ரீதேசிகன் விஷயமாக அருளிச்செய்த,

“ அன்றிவ் வுலகினையாக்கி யரும்பொருள் நூல் விரித்து
நின்று தன்னீள்புகழ் வேங்கடமாமலை மேவிப் பின்னும்
வென்றி புகழ்த் திருவேங்கட நாதனென்னும் குருவாய்
நின்று நிகழ்ந்த மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே ”

என்னும் பிள்ளையந்தாதிப் பாசுரத்தில் இவ்வர்த்தம் ஸ்பஷ்டம். பகவான் தமது தயவின் பெருக்கினால் ம்ருதப்ராயமாக விருந்த ஜீவராசிகளுக்குச் சரீராதிகளைத் தந்து சாஸ்த்ரமாகிய கைவிளக்கையும் தந்து உதவியதையொக்க ஸ்ரீதேசிகனும் ஸ்வரூபஜ்ஞானமும் தத்வஹிதபுருஷார்த்தஜ்ஞானமுமே ஆத்மாவுக்குப் பிறப்பாகுமாகையால் நம்முடைய ஸ்வரூபஜ்ஞானாதிகளை நமக்கு உபதேசித்து சாஸ்த்ரமாகிய தீபிகையையும் தந்தருளியது இவருடைய தெய்வத்தன்மையை விளக்குகிறது.

உகந்தருளிய தலங்கள் பலவற்றுள்ளும் கோயில், திருமலை, பெருமாள்கோவில் என்னும் மூன்றுமே சிறப்பித்துக் கூறப்படுகின்றன. இவை இவ்வாறு சிறப்பிக்கப்படுவது இவற்றுக்கு ஸ்ரீதேசிகனுடைய ஸம்பந்தத்தால் ஏற்பட்ட பெருமையாலேயேயாகும்.

“ காஞ்சீ யஸ்ய ஹி ஜந்மபூமிரவநீ விஹாரஸ்ய
வேங்கடாத்ரிரபவத் | வாஸஸ்தலீ ரங்கபுரீ தமீ
ட்யம் ஸ்ரீவேங்கடேசம் ஸமாச்ரயாம: ” ||

என்னும் ச்லோகத்தால் இந்த ஸ்தலங்களுக்கும் ஸ்ரீதேசிகனுக்குமுள்ள ஸம்பந்தம் விளங்கும். “ காஞ்சீபுரி ஸ்ரீதேசிகனுடைய ஜன்மபூமியென்னும் பெருமையை அடைந்தது ! திருவேங்கடத் திருப்பதி ஸ்ரீதேசிகன் விளையாடும் அரங்கமாயிற்று ! திருவரங்கம் இவர் நிரந்தரவாஸம் செய்யும் பெருமையைப் பெற்றது! இத்தலங்களுக்கு ஏற்பட்ட பெருமைதான் என்னே! ” என்று ஆச்சரியப்படுகிறார் ஸ்ரீநயினாராசார்யர். இந்த ஸம்பந்தத்தை ஒட்டியே ஸ்ரீதேசிகன் இம்மூன்று ஸ்தலங்களின் விஷயமாகவும் ‘ஆராத வருளமுதம் பொதிந்த கோயில்’ என்று ஆரம்பித்து மூன்று பாசுரங்கள் அருளிச் செய்ததுபோலும்! ஸ்ரீவரததேசிகன் அருளிச்செய்த இந்த ச்லோகத்திற்கு இன்னொரு அர்த்தமும் த்வனிக்கிறது. இவ்வர்த்தம் “ வேதப்ரஸித்தனாகிய எந்த பகவான் தாம் ஸ்வயம்வ்யக்தமாக ஆவிர்ப்பவித்த பெருமையைக் காஞ்சீபுரிக்கும், தமக்கு விஹாரோசிதமான க்ரீடாசைலமாகும் பெருமையைத் திருமலைக்கும், தமக்கு வைகுண்டத்தில் இருப்பைக் காட்டிலும் போக்யதமமான வாஸஸ்தலமாகும் பெருமையை ரங்கபுரிக்கும் தந்தருளினானோ, அத்தகைய ஸ்தோத்ரம் செய்யத் தகுந்தவனும் திருவுறையும் திருமார்பனுமான திருவேங்கடமுடையானைத் திருவடி தொழுது சரணமடைவோம் ” என்பதாம். இவ்வர்த்தம் பகவத்பரமாக இருப்பதால், ஸாக்ஷாத் பகவானே ஸ்ரீதேசிகனாக வந்தவதரித்தான் என்பதற்கு இதுவும் ஒரு ப்ரமாணமாகும்.

இவ்வாறே ‘ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:’ என்னும் தனியனில் ‘ஸ்ரீமாந்’ என்னும் பதம் ‘சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையானும்’, ‘அகலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கையுறைமார்புடைய நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானும்’ வேறல்லாமையைக் காட்டுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள அர்த்தங்களெல்லாம் ஸ்ரீதேசிகனுடைய ஸமானகாலத்தவர்களும் அவருடைய பெருமையை ப்ரத்யக்ஷமாகப் பார்த்திருந்தவர்களுமான பெரியோர்கள் அருளிச்செய்தவையாகும். ஸ்வாமியே தமது க்ரந்தங்களில் தம்மைப் பற்றி அருளிச்செய்தவற்றைச் சற்றே பரிசீலனம் செய்துபார்த்தாலும் ஸ்வாமி பகவதவதாரம்தான் என்னும் முடிவு இன்னும் நிச்சயமாகிறது.

ஸ்ரீதேசிகனுடைய சரித்ரத்தை ஸேவிப்பவர்கள், இவர் ஸாக்ஷாத் பகவானுடைய அவதாரமே என்பதைக் காட்டும் ஸம்பவங்கள் பலவற்றைக் காணலாம்.

ஸ்வாமி அவதாரம்செய்தது புரட்டாசித் திருவோணத்தில், இதுவே திருவேங்கடமுடையானுடைய அவதாரதினமுமாகும்,

'திருவோணத்தான் உலகாளுமென்பார்களே' என்றார் பெரியவார். "பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் காதுஞ் சோராமே யாள்கின்ற செங்கோலுடைச் செல்வ ஸ்ரீதேசிகன்" என்பதற்கு இதுவும் ஒரு சான்றல்லவா?

ஸ்வாமியின் சரிதையைக் குமாரநயினார் 'தூப்புலற்புதமே' என்னும் பதங்களில் ஸங்க்ரஹித்தார். அத்யாஶ்சர்யகுணசேஷ்டிதங்களையுடைய பகவானுடைய அவதாரமே ஸ்ரீதேசிகன் என்று காட்டுவதற்காகவே இவ்வாறு அருளிச்செய்தார்போலும். குழந்தையாக இருக்கும்போது தமது மாதுலருடன் அம்மாள் காலக்ஷேபகோஷ்டிக்குச் சென்று, ஜ்ஞானவ்ருத்தர்களும் வயோவ்ருத்தர்களுமாயிருக்கும் அங்கு காலக்ஷேபத்தில் அம்மாள்விட்ட பங்க்தியை எடுத்துக்காட்டிய பின் இவரைக் கேவலம் ஓர் குழந்தையென்றிருக்கப் போமோ? 'சிறியனென்று என் இளஞ்சிங்கத்தை இகழேல்' கண்டீர்.

ஸ்வாமி அப்புள்ளாரிடம் வித்யாப்யாஸம் செய்த அழகைக் கண்ணன் ஸாந்தீபினியிடத்தில் கல்விகற்பதற்கு ஒப்பிடுகிறார்கள்.

"க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் |
கோ ஹ்யந்யோ புவி மைத்ரேய மஹாபாரதக்ருத்பவேத்"||

என்பதுபோல், இருபது ஸம்வத்ஸரத்திலிருந்து ஸ்வாமி செய்தருளியதும் ஸமகாலத்தவர்களாலேயே

"பரஶ்ஶதம் வாசி பரஸ்ஸஹஸ்ரம் ஸ்ரீவேங்கடார்யஸ்ய
க்ருதா: ப்ரபந்தா: | தத்ராஸ்மதீயா: பஹு ஸங்க்ருஹீத-
ரத்யா: கதிஸ்யுர்ந ஸஹாந்து மந்யேதஸ்ஸஹாந்து"||

என்றும்,

"சீரொன்று தூப்புற்றிருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில்
வாழ்வார்க்கு வானேறப்போமளவும் வாழ்வு"

என்றும் கொண்டாடப்பட்ட க்ரந்தங்களைச் செய்தருள ஸாக்ஷாத் பகவானையன்றி மற்று யாரால்தான் கூடும்?

இவ்வாறு—

"ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய ஶாஸ்த்ரதீபப்ரதாநத: |
ஸ்ரீவேங்கடாத்ரிநாதோ(அ)ஸௌ ஸாக்ஷாத்வேதாந்ததேஶிக:"||

(ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரும் சாஸ்த்ரமாகிய கைவிளக்கைத் தந்தவருமாகையால், அந்தப் பிரஸித்தமான திருவேங்கடமுடையானே வேதாந்ததேசிகனுவார்) என்றபடி திருவேங்கடமுடையானே ஸாக்ஷாத் வேதாந்ததேசிகராவார். இதை 'ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யமுத்த்ருத்ய புஜமுச்யதே' என்று உத்கோஷிக்கலாம்.

இவ்வாறு பகவானும் நம்தேசிகனும் வேறல்லாமையைக் கண்ட பின்,

"அருடருமாரண தேசிகனே யெங்கள் தூப்புல் தேவே
வரு கவிதார்கிக சிங்கமே வாதியர் வாழ்வறுத்தாய்"

என்று இவரிடம் ஈடுபட்டு,

"தொண்டருக்குத் துணையடி வாழி நின் தூமுறுவல்
கொண்ட முகம் வாழி வாழி வியாக்கியா முத்திரைக்கை
வண்டிருநாமமும் வாழி மணிவட முப்புரிநூல்
கொண்ட சீர் தூப்புல் குலமணியே வாழி நின் வடிவே"

என்று வாயார வாழ்த்தி,

"வினைகாளுமக் கினி வேறோரிடந் தேடவேண்டுமெனச்
சினமேவி முன்போற் சிதைக்கும் வகை யிங்கரிது கண்டீர்
எனிதிவிராமாநுச முனி யின்னுரைசேருந் தூப்புல்
புனிதரென் புந்தி புகுந்து இகழ்ந்து பொருந்தினரே"

என்றும் இனி 'நமக்குப் பரமொன்றிலதே' என்றும் நிர்ப்பாராயிருப்பதே நமக்குப் பிராப்தம்.

வாழியணி தூப்புல் வரு நிகமந்தாசிரியன்
வாழியவன் பாதாரவிந்தமலர்—வாழியவன்
கோதிலாத் தாண்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்
தீதிலா நல்லோர் திரள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

ஸ்ரீதேசிகன் தேசிகத்வம்.

தேசிகனென்னும் சொல் பொதுவாய் ஆசார்யனைச் சொல்லவல்லதாயினும் (யோகரூடி) காரணஇடுகுறிப்பெயராக கவிதார்கிகஸிம்ஹமான நம் ஆசார்யரத்னத்திற்கே அஸாதாரணமாய் அமைந்ததென்பதை அனைவருமறிவர். இப்பதம் 'நிகமாந்த' என்கிற துணைச்சொல்லுடன் இணைந்து வேதாந்தவிழுப்பொருளை விளக்குமாசிரியனென்னும் அர்த்தத்தையளிக்கின்றது. இதை ஸ்வாமியே ஸங்கல்பஸூர்யோதயத்தில் (நிகமாந்தேஷு நிரூட கௌரவேண) வேதாந்தங்களை விரிப்பதில் விசேஷமாய் விருத்தியடைந்த கௌரவம் வாய்ந்தவர் என்றருளிச்செய்தார். இதற்கு கடந்த விபவ வருஷம் திருவஹீந்திரபுரம் தேசிகன் உத்ஸவத்தில் நடந்த விபவங்களிலொன்றாகிய ஸங்கல்பஸூர்யோதய நாடகத்தில் ஸூத்ரதாரரான ஸ்ரீ-உ.வ. பண்டிதபூஷணம் சேட்டலூர் ஸ்வாமி அருளிச்செய்த அர்த்தத்தை நாம் ஒருபோதும் மறக்கமுடியாது. அதாவது— வேதாந்தங்கள் வேறுவேறுவகையில் தத்துவங்களை விரிப்பதில் கலஹமேற்பட்டு நம் ஸ்ரீதேசிகனை தேசிகனாக வரிக்க, அவைகளின் தர்க்கங்களை விலக்கத் தாமும் இசைந்து (கடக) ஸமரஸப்படுத்தும் வாக்யங்களால் ஸந்திபண்ணிவைத்ததால் நிகமாந்தங்களுக்கும் ஆசார்யனுவார் நம் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன்—என்பது. இப்படிப் பெருமைவாய்ந்த திருநாமங்கள் பலவுண்டு நம் ஸ்ரீ தேசிகனுக்கு.

'த்வேஷப்ரமவிப்ரலம்பவர்த்மநோ வைதேசிகா தேசிகா:'

(த்வேஷம், தவறு, ஏமாற்றம் இவைகளின் வழிக்கு வேறுதேசத்திலிருப்பவர்கள் தேசிகர்கள்).

த்வத்ஸம்ச்ரயாவ்ருத்தய ஏஷ தயாளவ: தேசிகா: பூர்வ த்ருச்யாதே:

(உன்னை நாம் அடைவதற்கு தயவுள்ள தேசிகர் முன் சொன்னபடிகளில் முற்படுகிறார்)

இச்சந் ரங்கீ நிஜமபி பதம் தேசிகாதேசகாங்க்ஷீ

(பெரிய பெருமாள் தேசிகரின் நிதேசத்தை [நியமனத்தை] விரும்பி அதைப்பெற்றபின் தன் அரும்பதத்தையுமளிக்கிறார்).

'ஸத்தேசிக ஸம்ப்ரதாயரஹிதைர் அத்யாபி நாவகாஹிதம்'

(நம் தேசிகர் ஸம்ப்ரதாயத்தைச்சேராதமற்றவர்களால் இன்னுமறியப்படாதது). இப்படிப் பலவிடங்களில் ஸ்ரீமந்நாதமுனிகள் முதலான முன்னுசிரியரை வழிபட்டாலும் இவைகளில் சொல்லப்பட்ட நற்குணம் வாய்ந்த நம் ஸ்ரீ தேசிகனையும் நாமநுஸந்திக்கக் குறைவில்லை. ஸ்ரீபாதுகாஸஹஸ்ரத்தில்—

" ஸந்தேசிகைரநுகதோ விததேசிகாநாம் ஸரணீஸ்ஸரணாநாம் ஸாதுஜநாநாம் "

அடக்கமொடுக்கம் பெருமை பொறுமை இவைகளுக்கு வேறு தேசத்திலிருப்பதால் நாம் வைதேசிகரென்று அருளிச்செய்தது நம்போலியர்க்கனுஸந்தானத்திற்காக ஆகும். இது இங்குள்ள'மாத்ருசாம்' (என்னைப்போன்றவர்க்கு) என்பதால் ஸூசிக்கப்படுகிறது. இவ்விஷயத்தை ஸ்ரீஸாரசாஸ்திரத்தில் "அயோக்யோऽஹம் க்ஷமாஸு:" என்கிற ச்லோகத்தாலும் 'வாடினேன் வாடி' என்கிற ஆழ்வார்கள் பாசுரங்களாலும் தனக்கநுஸந்தேயமாகவுதாஹரித்த தோஷங்களை" என்று அருளிச்செய்தார்.

ஸ்ரீ:

கவிஸிம்ஹத்தின் கவித்திறம்.

க்ரீடாதூலிகயா ஸ்வஸ்மிந் க்ருபாரூஷிதயா ஸ்வயம் ।
ஏகோ விச்வமிதம் சித்ரம் விபு: ஸ்ரீமாநஜீஜநத் ॥

க்ரீடாதூலிகயா ஸ்வஸ்மின் க்ருபாரூஷிதயா ஸ்வயம் I
ஏகோ விச்வமிதம் சித்ரம் விபு: ஸ்ரீமாநஜீஜனத் II

இது ஸ்ரீயாதவாப்யுதயம் முதல் ஸர்க்கத்தில் நவமமும் (ஒன்பதாவதும்) அநவமமு (குற்றமற்றது)மான ச்லோகம். இதன் பொருள்— "ச்ரிய:பதி தன் தயை என்னும் வர்ணம் பூசிய லீலை என்னும் எழுதுகோலால் தம்மிடத்தில் தாமே வேறொரு உதவியின்றி இவ்வுலகமெனும் சித்ரத்தை எழுதினார் (உண்டுபண்ணினார்)" என்பதாம். இதில் 'தாமே தம்மிடத்தில்' என்றதால், உலகத்திற்கு பகவான் * நிமித்தகாரணமும் உபா

* நிமித்தகாரணம்— கார்யத்தை உண்டுபண்ணும் அறிவுள்ளவன். இதில் உதவிப்பொருள்களும் சேரும். உபாதானகாரணம்— காரியமாக மாறுவது.

தான காரணமுமாகிறான். ஏக: மற்றொருவன் ஸஹாயம் வேண்டுவதில்லையென்று மேற்படுகிறது. இப்படி அகிலமுமாக்க ஆற்றலுள்ளவனென்றும், 'ஹரே விஹரஸி க்ரீடாகந்துகைரிவ ஜந்துபி:' என்றபடி இது ஒரு லீலையாகவிருப்பதால் இதனால் அவனுக்குச் சிறிதும் ச்ரமமில்லையென்றும், தயைகலந்தது என்பதால் ஜீவராசிகளை ஸ்ருஷ்டிப்பது (சரீரத்தில் சேர்ப்பது) கோபகார்யமான சிக்ஷை அல்ல, "அசித விசிஷ்டான் ப்ரளயே ஜந்தூனவலோக்ய ஜாத நிர்வேதா | காணகளே பரயோகம் விதரஸி வ்ருஷசைலநாதகருணே த்வம் ||" என்று தாமே அருளியபடி அறிவற்ற அசேதனம்போலிருக்கும் ஆன்மாக்களைப் பார்த்து அலுப் படைந்து அவைகளுக்கு இந்த்ரியம்நிறைந்த தேகத்தைஅருளால் அளிக்கிறான் என்றும் ஸூசனம். "இங்ஙனே சொல்லவேண்டிய பொருள்கள் பலவுண்டு. ஆயினும் விரிவுக்கஞ்சிவிடுகிறோமென்று வ்யாக்யானம் செய்த வித்வானாகிய வேறு மதத்திலுள்ளவரும் வியந்து கூறினார் என்றால், கவிஸிம்மத்தின் கவித்திறம் கரைகடந்ததன்றோ? ஓர் சிறிய ச்லோகத்தில் பல அரிய பெரிய பொருள்களை கவிஸிம்மம் எளிய முறையில் இனிது கூறியது சொல்ல நிலமல்ல. ஷெடி காவ்யத்தில் முதல் ஸர்கத்தின் முடிவில் 'இதி கவிதார்க்கிக ஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய வேதாந்தாசார்யஸ்ய......ஸர்க்க:' என்ற வாக்யத்துக்கும், காவ்யம் செய்பவர் வாதிப்பவர் இவர்கள் விரோதிகளானால் சிங்கம்போல் பயங்கரரென்றும் அனுகூலரானால் அவர்களால் கொண்டாடப் படுகிறார் என்றும் எல்லா சாஸ்த்ரங்களிலும் எப்பொருளையும் ஸ்தாபிப்பதற்கும் கண்டிப்பதற்கும் சக்தரென்றும் வேதாந்தப் பொருள்களை வழங்குபவரென்றும் கருத்ததை வ்யாக்யாதா விரித்துரைத்தார். ஸ்ரீபாதுகாஸஹஸ்ரம் இந்திரநீலபத்ததியில் "க்லுப்தாவகுண்டனவிதிர் மணிபாதரக்ஷே நீலாம்சுகை: வலபித ச்மஸமுத்பவைஸ்தே | ஸங்கச்சதே முனிஜனஸ்யமதிஸ்ஸமாதௌ ராத்ரௌ ஸமஸ்தஜகதாம் ரமணேந லக்ஷ்ம்யா:" [கல்லிழைத்த பாதுகையே! இந்த்ரநீலங்களிலிருந்துண்டான கறுப்புகாந்திகளால் (கறுப்புவஸ்திரங்களால்)தன்னைமூடிக்கொண்டு யோகிகளின் புத்தியென்னும் பெண், ஸமாதி(த்யானம்) என்னும் அனைத்துலகின் இரவில், * லக்ஷ்மீகாந்தனுடன் ஏகாந்தத்தில் சேருகின்றாள்]

* 'கீதை— யா நிசா ஸர்வ பூதாநாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ' உலகமுறங்கும் விஷயமான பகவத்யானத்தில் யோகி விழித்து இருக்கிறார்.

என்பது ஒரு ச்லோகம். இதில் யோகிகளின் புத்தி முதலில் நீலரத்ன பாதுகையை நினைத்து பின் ஸ்ரீகாந்தனைச் சேருகிறது என்னுமர்த்தத்தை ரஸசாஸ்தரப்படி தமோபிஸாரிகை (இருளில் நாயகனிடம் செல்பவள்). (ஒருவருமறியாதபடி இரவில் பொருத்தமான கறுத்ததுணியால் தன்னை மறைத்து வருத்தமின்றித்தன் கணவனிடம் சேருகிறாள்) என்று பரம ச்ருங்கார வ்ருத்தாந்தமாக அருளியதில் வியக்காதவருமுண்டோ? வைராக்ய நிதிகள் விசேஷமாகச் செய்யும் ஸமாதியில் விலக்ஷணமாக தமோபிஸாரிகையின் ஸமாதியை (ஸாம்யத்தை) அழகாக அருளிய ஆச்சரியத்திற்கு அளவில்லை. தமோபிஸாரிகையின் த்ருஷ்டாந்தத்தினால் இருள் முதலிய பயகாரணங்கள் இருக்கச்செய்தேயும் அன்பின் மிகுதியால் அவள் அவைகளைப் பொருள்படுத்தாமல் போவதுபோல், ஸம்ஸாரத்தில் பல இடையூறிருப்பினும் அவைகளைக் கணிசியாது மஹான்களின் மதியானது மாதவனிடம் சேருகின்றது என்பது தேறுகின்றது. நீலாம்சுகை: என்னும் பதத்தில் பங்கமின்றி, கறுப்புவஸ்திரங்களையும், நீலகாந்திகளையும் அருளிச்செய்தது மிக்க வழகு. 'லக்ஷ்மீகாந்தனோடு' என்றதால், பிராட்டியும் பெருமாளும் சேர்ந்தே பக்திக்கு இலக்காகிப் பலனை அளிக்கிறார்கள் என்பதும் ஸூசிதம். மற்றோர் அர்த்தத்திலும், 'மற்றோர் பெருமை வாய்ந்த பெண்ணை மகிழ்விக்கும் மாதவனுடன் சேருகிறாள்' என்பதால் யோகிகளின் புத்தியாகிய பெண்ணின் திறனும், ரஸிக்யமும் வெளியாகின்றன.

ப. ஸ்ரீ.

" உத்தமமாம்புரட்டாசி-யோணத்தான்வாழியே
ஓர்மதுரகவிபனுவ லுள்ளுரைத்தான்வாழியே
தத்தில்முனிவாகனபோ-கம்மிழைத்தான்வாழியே
தமிழ்மறைக்கேண்பதினா-யிரம்முரைத்தான்வாழியே
எத்திசையுமெதிவரர்போ-லேத்தநின்றான்வாழியே
எழிலரங்கரின்னருளுக்-கிலக்கானான்வாழியே
தோத்தறவேவாதிகளைத்-தோலைத்திட்டான்வாழியே
தூப்புற்கோன்றிருவடிகள்-துலங்கவென்றும்வாழியே. "

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீநஞ்ஜீயர் ஸ்ரீஸூக்த பாஷ்யம்.

ஸ்ரீகோஷ்டிபுரம் ஸ்வாமி பூமிகையுடனும், இங்கிலீஷ் பூமிகை–மொழிபெயர்ப்பு, ஸ்ரீஸ்துதி, ஸ்ரீகுணரத்னகோசம், இந்த்ரஸ்துதி இவற்றிற்கு இங்கிலீஷ் மொழிபெயர்ப்புக்களுடனும், லக்ஷ்மீ ஸஹஸ்ரநாமாவளியுடனும், ஸ்ரீ A. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் M. A. ஸ்வாமியால் அச்சிட்டு ப்ரசுரம் செய்த க்ரந்தத்தை ஸேவித்ததில் எமக்குள்ள ஹர்ஷத்திற்கு அளவில்லை. இதுவரையில் ஸ்ரீநஞ்ஜீயர் பாஷ்யம் அச்சிடப்படவில்லை. கையெழுத்துச் சுவடியில் முன்பு ஸேவித்துளோம். இது ஸ்ரீநஞ்ஜீயர் அருளியது என்பதற்குப் பல ஹேதுக்கள் பக்ஷபாதலேசமற்ற நம் ஸ்ரீகோஷ்டிபுரம் ஸ்வாமியால் ஸம்ஸ்க்ருதபூமிகையிலும், ஸ்ரீ. ஸ்ரீஸ்வாமியால் இங்கிலீஷ் பூமிகையிலும் காட்டப்பட்டிருக்கின்றன. இன்னம் சில காரணங்களையும் காட்டுவோம்.

(1) ஸ்ரீதேசிகன்நாளிலிருந்த ஸ்ரீநஞ்ஜீயர் ஸ்ரீஸூக்தபாஷ்யம்தான் இது என்பதற்கும், இது ஸ்ரீநஞ்ஜீயரே அருளியது என்பதற்கும் பல அடையாளங்களுண்டு. “பட்டரும், ‘வராஹம் வஹம் வா விதீய.. க்ஷம ஜஜெஸ கஜய கொரஜஸூாஷாரஹாவஃ’ என்று ச்ருதியில் உதாரசப்தத்திற்கு வ்யாக்யானம் பண்ணினர்” என்று ஸ்ரீதேசிகன் ஸாதித்தது தாமாக ஸாதிக்கவில்லை. பட்டர் சிஷ்யர் நஞ்ஜீயர், பட்டரிடமே கேட்டு ஸ்ரீஸூக்தபாஷ்யத்தில் பட்டோலை செய்ததையே கொண்டு இப்படி ஸாதித்தது 5-வது சரணாகதிமந்த்ரத்தில் ‘ஷெவஜஷூரஷாராழ’ என்றவிடத்தில் (பக்கம்–33-இல்) இந்த ச்லோகத்தையே இந்த பாஷ்யத்தில் உதாஹரித்துளது. இந்த பாஷ்யகாரர் பட்டருடைய ஸாக்ஷாத் சிஷ்யராக இருந்திருக்கவேணும். பக்கம் 49-இல் ‘இது ஸ்ரீவத்ஸசிந்ஹமிச்ராராலும், பட்டபராசரபாதர்களாலும் ஸ்தாபிக்கப்பட்டது’ என்றவிடத்தில் ஒரே வாக்யத்தில் சொல்வேற்றுமையால் பட்டர் இவருக்கு ஆசார்யபாதர் என்பது நிச்சயம். அடுத்த வாக்யத்தில் ‘பாஷ்யகாராதிகளால்’ என்றார். க்ரந்தம் முழுவதிலும் இப்படி வேற்றுமையையே காண்கிறோம். (2) ‘ஸ்ரீஸ்ரீஸூக்தம் ஷஹஷவயதெ தாம வ ஶாவாநஶாவழ’ என்றும்

‘யஷவயொஃ ஷூாதஜு ஷதஷஜஷழ’ என்றும் ஸ்ரீகுணரத்னகோச ச்லோகங்களை உதாஹரித்தார். தம்மாசிரியர் இந்த ச்லோகத்தில் செய்த ப்ரதிஜ்ஞையை இந்த பாஷ்யத்தில் சாகோபசாகமாக உபபாதித்து ஸ்தாபனம் செய்கிறார். இந்த ச்லோகத்தை உதாஹரிக்குமிடத்தில்தான் மிக்க விஸ்தாரமான உபபாதனம். (3) ‘ச்ரிய: பதே’ என்று துடங்கி ‘ச்ரிய: பதே’ என்று முடிப்பதாக, ‘ஜாதவேத:’ என்னும் பதம் I, 15-மந்த்ரங்களிலிருப்பதைக்கொண்டு உரைத்தது திருவாய்மொழி வ்யாக்யானசைலி வாஸனையைக் காட்டும். (4) ஒரு விஷயத்துக்கு ப்ரமாணங்கள் விசேஷமாயிருந்தால், ப்ரமாணங்கள் ‘ஸாபேக்ஷம்’ என்று இந்த பாஷ்யம் சில விடங்களில் பேசுகிறது. இது பட்டர் சிஷ்யராயிருந்து பட்டருடைய வ்யவஹாரங்களைக் கேட்ட வாஸனை. ‘ஶ்ருதிஶிரஸி ஸாஹிக்ஷம ஷஹணஃ காரணகவழ’. ‘சுதிஸூக்தத்தாலும் அவள் மாஹாத்மியம் ஸாபிக்ஷம்’. “விஷ்ணுபுராணத்தில்போல ஸனத்குமாரஸம்ஹிதையிலும், நம் அபேக்ஷிதம் ஸாபிக்ஷம், ப்ரமாணப்பஞ்சமில்லை,’ என்று 8- 15—பக்கங்களில். (5) “ஹொமமொக்ஷ ஷூஷாதா” என்று பலவிடங்களில் ‘ஹொமமொக்ஷவடிங்களின் சேர்த்தியைக் காண்கிறோம். போகாபவர்கமென்பது ப்ராயிகமான வ்யவஹாரம். “ஹொமமொக்ஷாஷராவெ” என்று ஸ்ரீதேசிகனும் ப்ரயோகிக்கிறார். (6) முன்பு வேதாந்தியென்று அத்வைத வித்வானாகவிருக்கையில் ‘பாமதீ’ க்ரந்தத்தை நன்கு அப்யஸித்தவர். இவர்வாக்யங்கள் பாமதீஜாதீயம்; ஒரே அச்சு; அதைப்போலவே இவருடைய ஸம்ஸ்க்ருதசைலீ அத்புதம்; உபபாதனக்ரமமும் அதேரீதி. ‘வரஹம ஷக்தம ஸூமெத’ என்று மோக்ஷத்தைப் பரமமுக்தியென்று இவர்மங்களச்லோகத்தில்பேசியது, இவர் முன்பு அத்வைதவித்வானாயிருந்தவர் என்பதை நிச்சயமாய்க் காட்டும். க்ரமமுக்தி பரமமுக்தி என்பது அத்வைதவேதாந்தவ்யவஹாரம். முன்பு இப்படி அத்வைதநிபுணராயிருந்தும் இந்த ஓரிடத்திலும் வாக்யசைலியிலும்தான் இவருடைய அத்வைதக்ரந்தஸம்ஸ்காரத்னதக் காண்கிறோம்; அடியோடு வைஷ்ணவவ்யவஹாரம் நெஞ்சில் பிறகு ஊறிவிட்டதை முழுவதும் காண்கிறோம். (7) பட்டர் சிஷ்யரான இவருடைய ராஸிக்யத்

திற்குளல்லேயில்லே, பாராசரவர்ணனத்தைக்கவனிக்க. 'பாராசர்யர் பிதா', 'வஸிஷ்டர்பௌத்ரர், பிதாமஹரான ப்ரஹ்மாவின் நப்தா', 'சுகரின்பிதாமஹர்', 'மைத்ரேயரின் ஆசிரியர்'. (8)'ஈஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ' என்னுமிடத்தில் பாஷ்யம்அத்யத்புதம். 'ஈசாநா' என்பதில் 'ஈசு' ஸ்வபாவசீலமான ஸ்வதஸ்ஸித்தமான ஜகதீசித்ருத்வத்தை விளக்குகிறது. 'ஜகத்ரக்ஷணாதிகள் தீக்ஷையுடன் கூடிய யஜ்ஞம்' என்பதை அடுத்த பத்நீசப்தம் காட்டுகிறது. 'ஈஶாநா தேவீ புவநஸ்ய' என்ற மந்த்ரத்தில் இந்த ஈஶ்வரவ்யாபாரங்கள் இவளுக்கு லீலேஎன்று காண்கிறது. இப்படிக்கு 'ஜநாதிபேஶ்வரீ, ரக்ஷோக்ஷோ, ஶ்ரீநிவாஸே' என்பது உபபாதிக்கப்படுகிறது. (9) 'ஹிரண்ய' என்று தொடக்கம். அதற்கு 'ஹிதரமணீய' என்பது யாஸ்கர் பொருள். 'ஹித' என்பது 'ப்ராபகம், ரமணீயம், ப்ராப்யம்', ப்ராப்யப்ராபகமிரண்டும் லக்ஷ்மீ என்று உபக்ரமத்தைக் காட்டியருளினர். (10) ஸஹஸ்ரநாமபாஷ்யத்தில் திருநாமங்களுக்குப் புளகாங்கிதமாகப் பொருளுரைப்பதும், வ்யாகரணவ்யுத்பத்தியைக் காட்டும் ரீதிகளும் இங்கே அழகாக அநுஸரிக்கப்படுகின்றன. இந்த க்ரந்த பூமிகைகளையும், மற்றவிஷயங்களையும் புகழ்ந்து எடுத்துக் காட்டவேண்டிய பலவிடங்களுள. பின்பு விஸ்தரிப்போம்.

" கவிவாதிசிங்கமெனக்-கண்ணுற்றான்வாழியே
கலங்காதித்தரிசனத்தைக்-காத்தளித்தான்வாழியே
நவில்தருவேதாந்தத்தி-னல்லாசான்வாழியே
நவையிலெல்லாத்தந்திரத்தின் சுதந்தரத்தான்வாழியே
புவிகுளிரநூல்பலவும்-புகன்றிட்டான்வாழியே
புகரிலாதிரகசியப்-பொருளுரைத்தான்வாழியே
கவிபாய்வேங்கடத்திருமால்-கவின்கண்டைவாழியே
கலியாணகுணத்தூப்புற்-காவலன்ருள்வாழியே. "

"பயமா யினமாயும் பாவங்கள் வீயுஞ்
சயமனைத்துந் தாமேகை கூடும் — துயரொன்றும்
வாராது வண்மையால் வாதிசிங்க மிங்குதித்த
சீரொன்று சிந்திப்ப ரேல்."   (தேசிகர் நூற்றந்தாதி—31)

(படை) த்விஜஸ்ய [த்விஜஸ்ய] - தாய் கர்ப்பத்திலிருந்து முதலில் முட்டையாய்ப் பிறந்து, பிறகு அடைகாத்து, அதிலிருந்து கை, கால், சிறகு முதலியதோடு பிறந்து, இப்படியாக இருதரம் பிறக்கும் பக்ஷியாகிய, (ப்ராம்மணராகிய), ஸிதபக்ஷஸ்ய [ஸிதபக்ஷஸ்ய] - வெண்சிறகையுடைய, (ஸாதுஜனங்கள் ஸஹாயத்தையுடைய), கவே: [கவே:] - ஜலத்தில் ஸஞ்சரிக்கும் பக்ஷிக்கு, (ஸூக்ஷ்மதர்சிக்கு), ஹம்ஸ இதி ஸாஜாத்யம் [ஹம்ஸ இதி ஸாஜாத்யம்] - ஹம்ஸபக்ஷியென்பதை ஒத்திருப்பது, (ஹம்ஸரென்னும் ஸந்யாஸிகளோடு ஒற்றுமை), கதிசப்திதவ்ருத்திபி: [கதிசப்திதவ்ருத்திபி:] - நடை, சப்தம், ஜீவிக்கும் மார்க்கம் ஆகிய இவற்ருல், (ஆசரணை, உபதேசசப்தம், ஜீவிக்கும் மார்க்கம் ஆகிய இவற்ருல்), அபி ந நிரஸ்யதே [அபி ந நிரஸ்யதே] - மறுதளிக்கப்படுகிறதில்லையா?

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ஜலத்தில் ஸஞ்சரிக்கும் சில பக்ஷிகள் ஹம்ஸத்தைப்போலவே இருதரம் பிறக்கும்; வெண்மையான சிறகுகளும் உடையதாயிருக்கும். இப்படிச் சில விதத்தால் ஒற்றுமையிருந்தாலும், நடையழகு, த்வநி, வயிறு வளர்க்குமாஹாரம் ஆகிய இவற்றில் வேற்றுமைகளால் இரண்டிற்கும் ஸாஜாத்யம் இல்லையென்று தள்ளப்படவில்லையோ? அப்படியே காஷாயம் தரிக்கும் ஸந்யாஸிகள் ப்ராம்மணராயும், நல்ல சிஷ்யக்கூட்டமுடையவராயும், ஜ்ஞானமென்னும் வெண் சிறகு உடையவராயும், பண்டிதராயும் ஹம்ஸரென்று பெயர்வழங்கப்படுபவராயுமிருப்பினும், ஆசரணைகள் உபதேசசப்தங்கள், பிக்ஷாவ்ருத்தி முதலியவற்றில் வேற்றுமைகளால் உண்மையான ஹம்ஸஸந்யாஸிகள் அல்லவென்று நிஷேதிக்கவேண்டியது ந்யாயம்தான்.

அவ்யவஸ்திதவ்ருத்தாநாமபிஶ்ருதிசக்ஷுஷாம் ।
அதர்மார்ஜிதபோகாநாமாஶீரப்யஹிதோசிதா ॥௪௪॥

அவ்யவஸ்திதவ்ருத்தானும் அபிஙச்ருதிசக்ஷுஷாம் ।
அதர்மார்ஜிதபோகானும் ஆசீரப்யஹிதோசிதா ॥ (44)

(ப-ரை) அவ்யவஸ்திதவ்ருத்தாநாம் [அவ்யவஸ்திதவ்ருத்தாளும்] - ஆசாரத்தில் வ்யவஸ்தையில்லாதவரும், ('அவி'என்னும் மலைகளில் வர்த்துளவடிவமாயிருக்கும்), அபிந்நச்ருதிசக்ஷுஷாம் [அபிந்நச்ருதிசக்ஷுஷாம்] - ஜீவருக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் சொல்லுவதுபோலுள்ள அத்வைதச்ருதிகளை மட்டும் பார்ப்பவரும், (காதும் கண்ணும் ஒன்றேயாயிருப்பதும்), அதர்மார்ஜிதபோகாநாம் [அதர்மார்ஜிதபோகாளும்] - அதர்மத்தால் ஸம்பாதித்து அநுபவிக்கும் போகங்களையுடையவரும், (பிறரை ஹிம்ஸித்துக் கொல்லவே பாபசரீரம் பெற்றதுமான பாம்பினுடைய), ஆசீரபி [ஆசீரபி] - வாயால் ஆசீர்வாதமும்,)வாயில் ஆசீ-யென்னும் விஷப்பல்லும்), அஹிதோசிதா [அஹிதோசிதா] - கெடுதியை விளைவிக்கும்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— மலையிலுள்ள வ்ருத்தமான (வர்த்துளாகாரமான, குண்டலம்போன்ற) உடலுடையதும், கண்ணும் காதும் ஒன்றேயானதும், விஷத்தைக் கக்கி உலகத்தை ஹிம்ஸிப்பதற்கே பாபசரீரம் பெற்றதுமான பாம்புகள் வாயால் விடுவது விஷமேயாகும்; அது கெடுதலைத்தான் செய்யும். பேதச்ருதிகள் அபேதச்ருதிகள் இவற்றிற்கு மத்யஸ்தச்ருதிகளைக்கொண்டு விஷயவ்யவஸ்தையைச் செய்து, ஜீவப்ரஹ்மபேதத்தைக் கொள்ளலாம். அந்த வ்யவஸ்தையில் புத்தியைச் செலுத்தாமல், இரண்டும் ஒன்றே என்ற மேல்பொருளைமட்டும் கொண்டு அதை உபதேசிப்பது உலகத்திற்கு ஹிதமன்று; அந்த உபதேசம் ஆசீவிஷத்திற்கொக்கலாம். நல்ல ஜ்ஞானமில்லாதார் செய்யும் ஆசீர்வாதம்கூடத் தீங்கையே கொடுக்கும். (44)

துஷ்டைராரோபித꞉ கச்சித் அநர்த்தக்ரியயாந்வித꞉ ।
அஸத்காரேண க்ருஹ்யேத விருத்தாகாரவேதிபி꞉ ॥ ௪௫ ॥

துஷ்டைராரோபித: கச்சித் அனர்த்தக்ரியயாங்வித: I
அஸ்த்காரேண க்ருஹ்யேத விருத்தாகாரவேதிபி: II (45)

(ப-ரை) துஷ்டை꞉ [துஷ்டை:] - பொல்லாதவரால், (தோஷமுள்ள பார்வையையும் உடையவரால், தோஷமுள்ள புலன்களால்), ஆரோபித꞉ [ஆரோபித:] - உயரத் தூக்கி

உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கப்பட்ட, (ப்ராந்தியால் கல்பிக்கப்பட்ட), கச்சித் [கச்சித்] - ஒருவர், (ஓர் பொருள்), அநர்த்தக்ரியயாந்வித꞉ [அநர்த்தக்ரியயா அந்வித:] - துஷ்டச்செய்கைகளோடு கூடியவராயிருப்பவர், (தனக்கு ஏற்பட்ட வ்யாபாரத்தைச் செய்யச் சக்தியற்றதாயிருப்பது), விருத்தாகாரவேதிபி꞉ [விருத்தாகாரவேதிபி:] - அவர்களுடைய கெட்ட ஸ்வபாவங்களைத் தெரிந்துகொண்டவரால், (உண்மையிலுள்ள நேர்விரோதமான ஆகாரங்களைத் தெரிந்துகொள்ளுவதால்), அஸத்காரேண [அஸத்காரேண] - மர்யாதையில்லாமல் பூஜ்யரன்று என்று, (பொய்த் தோற்றமென்று, உண்மையில்லாதது என்று), க்ருஹ்யேத [க்ருஹ்யதே] - எண்ணப்படுவார். (எண்ணப்படும்). 'ஆரோபித꞉' என்பது (உயர்த்திவைக்கப்பட்ட என்பதையும், (ப்ராந்தியினுல் கல்பிக்கப்பட்ட) என்பதையும் சொல்லும்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:- துராசாரரான அஸத்துக்கள் நிந்திக்கத் தக்கவராயினும், இக்கலியில் தூக்கிவைத்துப் புகழப்படுகிறார்கள். ஆனுல் அவர்கள் ஒளிமறைவான துராசாரங்கள் வெளிப்பட்டவுடன் அவர்கள் அவமதிக்கப்பட்டு அஸத்துக்களென்று கீழே தள்ளப்படுவார்கள். உண்மையில் அஸத்துக்களான அவர்களுடைய கெட்ட குணங்கள் முதலில் க்ரஹிக்கப்படாதபொழுது, அவர்கள் ஸத்தென்று தப்பாக நினைக்கப்பட்டுப் பூஜிக்கப்பட்டார்கள். அவர்கள் தோஷங்கள் க்ரஹிக்கப்படாததால், அஸத்துக்கு க்யாதி ஏற்பட்டுவிட்டது. அவர்களுடைய உண்மையான துர்குணங்கள் தெரிந்தவுடனே அவர்களுக்கு முன்பிருந்த ஸத்க்யாதி தொலைந்து, அவர்கள் அஸத்தென்னும் க்யாதியை அடைகிறார்கள். இந்த ச்லோகத்தில் ப்ராந்தியால் ஒரு பொருள் தப்பாகத் தோற்றும் விஷயத்தில் அஸத்க்யாதி, அக்யாதி, அந்யதாக்யாதி முதலிய பல பக்ஷங்கள் ஸூசிக்கப்படுகின்றன. அடியோடு இல்லாத பொருளுக்கும் முழுப்பொய்யான தோற்றத்தை சூன்யவாதத்தில் ஒப்புவர். அடியோடு அஸத்தான ப்ரபஞ்சம் நம்முடைய விபரீதக்ராஹியான புலன்களால் கல்பிக்கப்படுகிறது; 'ஸத்வம்' 'உண்மையான இருப்பு' என்பது 'அர்த்தக்ரியாகாரித்வம்',

'அந்தப் பொருளுக்கேற்ற வ்யாபாரத்தைச் செய்வது'. பொய்யாகத் தோன்றும் கானல் நீர் தாஹத்தைத் தீர்க்காது, நீருக்கேற்பட்ட வ்யாபாரத்தைச் செய்யாது. ஆதலால் அது பொய். நீருக்கேற்பட்ட வ்யாபாரத்தை அது செய்வதில்லை. நீருக்கு எதிர்தட்டான தன்மையைத் தெரிந்தவுடனே அது நீரன்று என்ற விவேகம் ஏற்படுகிறது. இரண்டு பொருள்களுக்குமுள்ள வேற்றுமையான ஆகாரம் அறியப்படாததால், ப்ராந்தி உண்டாயிற்று என்றும், வேற்றுமையான ஆகாரம் தெரிந்ததும், ப்ரமம் தொலையுமென்றும், 'அக்யாதி'பக்ஷம். அஸத்துக்கு க்யாதி என்னும் புகழ் வருவது சூன்யவாதிக்கு அஸத்துத் தோன்றுவதுபோலாகும். குணசூன்யரான அஸத்துக்களுக்கு க்பாதி ஏற்படுவது அவர்களுடைய தோஷங்களை நாம் க்ரஹிக்காததால்தான். (45)

தமஃ ஸ்வபாவமலிநம் வ்ருத்த்யா லோகோஜ்ஜிதாச்ரயம் ।
தண்ட்யம் மித்ரேண ராஜ்ஞா ச த்ருஷ்டதோஷாந்வயம் விதுஃ ॥

தம: ஸ்வபாவமலிநம் வ்ருத்த்யா லோகோஜ்ஜிதாச்ரயம் ।
தண்ட்யம் மித்ரேண ராஜ்ஞா ச த்ருஷ்டதோஷாங்வயம் விது: ॥

(ப-ரை) வ்ருத்த்யா [வ்ருத்த்யா]-நடத்தையினால்,(தன் பரவுதலால்), லோகோஜ்ஜிதாச்ரயம் [லோகோஜ்ஜிதாச்ரயம்] - உலகத்தாரால் நிந்தித்துத் தள்ளப்படுவதை ஆசரிக்கும் (வெளிச்சமற்ற ப்ரதேசத்தை ஆச்ரயிக்கும்), த்ருஷ்டதோஷாந்வயம் [த்ருஷ்டதோஷாந்வயம்]- தோஷஸம்பந்தமுடையவனுய்த்தெரியப்படும்,(இரவில் காணப்படும்), தமஃஸ்வபாவமலிநம் [தமஃ ஸ்வபாவமலிநம்] - தமோகுணத்தன்மையால் மாசுநிரம்பிய, (தீய தன்மையுடைய இருட்டும்), மித்ரேண [மித்ரேண] - ஸ்நேஹிதனுலும்; (ஸூர்யனுலும்), ராஜ்ஞா ச [ராஜ்ஞா ச] - ராஜாவினுலும், (சந்த்ரனுலும்), தண்ட்யம் [தண்ட்யம்] - தண்டிக்கத் தக்கவன் என்று (தண்டிக்கத்தக்கதென்று), விதுஃ [விது:] - பெரியோர் அறிவார்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— தமோகுணம் நிரம்பியவர் இருட்டுக்கொப்பாவார். ஸம்ஸ்க்ருதபாஷையே இருட்டுக்கும் தாமஸஸ்வபாவத்திற்கும் ஒரே திருநாமத்தைச் சாற்றிற்று.

இருட்டென்பது வெளிச்சமில்லாத இடத்தை ஆச்ரயித்துப் பரவியிருக்கும். தமோகுணமுடையவர் உலகத்தார் வெறுத்து நிந்திப்பதை ஆசரிப்பர். இருட்டென்பது இரவில் அதிகமாகக் காணப்படும். 'தோஷா' என்பதற்கு 'இரவில்' என்பது பொருள். 'மித்ர' என்பது ஸுஹ்ருத்தையும் ஸூர்யனையும் சொல்லும். 'ராஜா' என்று சந்த்ரனுக்கும் பெயர். இருட்டை ஸூர்யனும் சந்த்ரனும் அகற்றுவார். துஷ்டஸ்வபாவமுடையவனைத் தோழனும் ராஜாவும் கண்டிக்கவேணும். (47)

ஜாதிமாத்ரசரணா பஹிஷ்க்ருதாஃ
கேசிதாத்ருதஜகந்யவ்ருத்தயஃ ।
ரோஷணா விபரீதாவிநோ முஹுஃ
ஹ்ரேபயந்தி ஜநமுஜ்ஜிதஹ்ரியஃ ॥ ॥ சஎ ॥

ஜாதிமாத்ரசரணா பஹிஷ்க்ருதா:
கேசிதாத்ருத ஜகந்யவ்ருத்தய: ।
ரோஷணு விபரிதாவிநோ முஹு:
ஹ்ரேபயந்தி ஜநமுஜ்ஜிதஹ்ரிய: ॥ (47)

(ப-ரை) கேசித் [கேசித்] - சிலர், ஜாதிமாத்ரசரணாஃ [ஜாதிமாத்ரசரணா:] - குலப்பிறப்பைத் தவிர வேறு புகழில்லாதவராய், பஹிஷ்க்ருதாஃ [பஹிஷ்க்ருதா:] - ஜாதியிலிருந்து நீக்கப்பட்டவராய், ஆத்ருதஜகந்யவ்ருத்தயஃ [ஆத்ருதஜகந்யவ்ருத்தய:] - தாழ்ந்த தீய வ்ருத்திகளைக் கைப்பற்றினவராய், ரோஷணாஃ [ரோஷணு:] - கோபிப்பதே ஸ்வபாவமாய், விபரீதாவிநஃ [விபரிதாவிந:] - விபரீத வழிகளிலோடுகிறவராய், முஹுஃ [முஹு:] - அடிக்கடி, உஜ்ஜிதஹ்ரியஃ [உஜ்ஜிதஹ்ரிய:] - வெட்கத்தை விட்டவராய், ஜநம் [ஜநம்] - தங்கள் பிறவிஜாதியை, ஹ்ரேபயந்தி [ஹ்ரேபயந்தி] - அவமானத்திற்குள்ளாக்குகிறார்கள்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— குடிப்பிறப்பு மட்டுமிருந்து, தாழ்ந்த தீயவ்ருத்திகளைக் கைப்பற்றித் தலைகீழாக விபரீதமாக நடந்து, வெட்கமில்லாமலிருப்பவர், தாங்கள் பிறந்த

குடியை வெட்கத்திற்குள்ளாக்குவர். வாதங்களில் சிலர் தங்கள் கக்ஷிக்கே விரோதமான யுக்திகளென்னும் ஜாதிவாதங்களையே பேசுவர்; அப்படிப் பேசுகையில் அவர்களை மத்யஸ்தர்களான பண்டிதர்கள் ஸபையில் வாதிக்க யோக்யரல்லர் என்றும் பஹிஷ்காரம் செய்வர். எதிர்வாதி சொல்லும் வாக்யங்களில் தப்புப் பொருள்களைக் கொண்டு ச(ஹ)லமென்னும் துர்வாதத்தைச் செய்வர். ஸபையில் கோபத்தாலேயே இரைச்சல் போட்டுக்கொண்டு கோப இரைச்சலால் தங்கள் துர்பலக் கக்ஷியைப் பலப்படுத்தப் பார்ப்பர். புத்தி அடிக்கடி மிக விபரீதமாகத் தப்புகளில் பாய்ந்து கொண்டிருக்கும். வெட்கத்தைவிட்டுத் துர்கக்ஷி செய்வர். இப்படி துர்வாதம் செய்பவர் தங்கள் கக்ஷியைச் சேர்ந்த ஜனங்களை வெட்கத்திற்குள்ளாக்குவார். 'ஜகந்யவ்ருத்தி'யென்பது நேர் பொருளல்லாத, லாக்ஷணிகப்பொருளாகும். எதிரிப் பேச்சுக்குத் தப்புப் பொருளையாதரித்து தூஷிப்பர். (47)

ஆலோகவதி யத்வசேந ஸுகதிம் விந்தந்தி பூதா
ந்யஸௌ த்ருஷ்டிஸ்நேஹவசேந ஸா விதநுதே வம்சே
புஜங்கப்ரமம் । தக்ஷா போகிஷு கேஷுசித் விஷமிதாம்
த்ருஷ்டிம் நிஹந்தும் க்ஷணாத் தாநப்யாசு விநாச
யேத் க்ஷணருசி: காசித் க்ஷணஸ்பூர்ஜது: ॥ ௪அ ॥

ஆலோகவதி யத்வசேன ஸுகதிம் விந்தந்தி பூதாந்யஸௌ
த்ருஷ்டி: ஸ்நேஹவசேந ஸா விதநுதே வம்சே புஜங்கப்ரமம் I
தக்ஷாபோகிஷு கேஷசித் விஷமிதாம் த்ருஷ்டிம் நிஹந்தும்
க்ஷணுத் தாநப்யாசு விநாசயேத் க்ஷணருசி: காசித் க்ஷண
ஸ்பூர்ஜது: II (48)

(ப-ரை) ஆலோகவதி [ஆலோகாவதி] - வெளிச்சமுள்ள வரையில், யத்வசேந [யத்வசேந] - எதனுதவியால், ஸுகதிம் [ஸுகதிம்] - நல்ல வழியை, (நல்ல ஸஞ்சாரத்தை), பூதாநி [பூதாநி] - ப்ராணிகள், விந்தந்தி [விந்தந்தி] - அறிகிறார்களோ, (அடைகிறார்களோ), ஸா [ஸா] - அந்த, த்ருஷ்டி: [த்ருஷ்டி:] - கண்ணானது, (பார்வையானது), ஸ்நேஹவசேந [ஸ்நேஹவசேந] - ஆசையான அபிநிவேசத்தால், (தப்பான தைலமென்கிற ஓர் தைலப்பசையைப் பூசிக்கொள்வதால), வம்சே [வம்சே] -

மூங்கிலில், (நற்குலத்தில்), புஜங்கப்ரமம் [புஜங்கப்ரமம்] - பாம்பென்னும் பொய்த் தோற்றத்தை, (விடனென்னும் புத்தியை, விடனுடைய வருகையை), விதநுதே [விதநுதே] - உண்டு பண்ணுகிறது. கேஷுசித் போகிஷு [கேஷுசித் போகிஷு] - சில பாம்புகளில், (விடபுருஷர்களில்), விஷமிதாம் [விஷமிதாம்] - பழுதையென்று விபரீதமான (நல்லோரென்று விபரீதமான), த்ருஷ்டிம் [த்ருஷ்டிம்] - பார்வையை, (தோற்றத்தை) க்ஷணாத் [க்ஷணுத்] - ஒரு நொடிப்பொழுதில், நிஹந்தும் [ஹந்தும்] - போக்கிக்கொள்வதற்கு, (சிலர்) தக்ஷா: [தக்ஷா:] கெட்டிக்காரர்கள், தாநபி [தாநபி] - அவர்களையும், க்ஷணஸ்பூர்ஜது: [க்ஷணஸ்பூர்ஜது:] - ஸ்வல்பகாலம் ஓங்கி ஆடம்பரம் செய்யும், காசித் [காசித்] - ஒரு, க்ஷணருசி: [க்ஷணருசி:] - க்ஷணகாலமுள்ள ஆசையானது, (மின்னலானது), ஆசு [ஆசு] - விரைவில், விநாசயேத் [விஞசயேத்] - கெடுத்துவிடும்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— தவளைத் தைலப் பசையைக் கண்ணில் பூசிக்கொண்டால், மூங்கிலைப் பார்த்தால் அதில் பாம்பென்னும் ப்ராந்தி உண்டாகும் என்பர். தங்கள் தங்கள் ஆசைக்குத் தக்கபடி (ருசிக்குத் தக்கபடி, ஸ்நேஹத்திற்குத் தக்கபடி) அவரவர்கள் ஒரு பொருளைத் தங்கள் இஷ்டம் போலக் கொள்ளுவார்கள். தீவ்ரமான ஆசையினுல், மிக்க அபிநிவேசத்தால் பொருள்கள் விபரீதமாகக் க்ரஹிக்கப்படும். அதற்குக் காரணம் ருசி, ஸ்நேஹம். 'ஸ்நேஹம்' என்பது ப்ரீதியையும் தைலத்தையும் சொல்லும். தப்பான தைலப் பூச்சினுல் கண் விபரீதமாகப் பார்ப்பதுபோல் ஓர் அதிகப் பற்றினுல் பொருள்கள் பற்றையநுஸரித்து விபரீதமாகக் கொள்ளப்படும். பட்டப் பகல் வெளிச்சத்திலும் ஸ்நேஹப் பூச்சின் தோஷத்தால் விபரீதப்பார்வையேற்படும். பட்டப்பகலைப்போல ஸ்பஷ்டமான விஷயத்திலும், ஸ்நேஹவிசேஷத்தால் ஆசைக்குத் தக்கபடி தப்புக்ரஹணம் உண்டாகும். பாம்பில் சிலருக்கு உருவத்தினெற்றுமையால் பழுதையென்கிற தப்புத்தோற்றம் முதலில் உண்டானுலும், அதை உடனே போக்கிக்கொள்ள வல்லவராயிருப்பர். ஓர் பொருளை முதலில் தப்பாக க்ரஹித்தாலும், உடனே அந்த ப்ராந்தியைத் தாங்களாகப் போக்கிக்கொள்ளும் புத்திவலிமை சிலர்க்கிருக்க

லாம்; ஆயினும், அவர்களுக்கு ஓர் ஸமயத்தில் ஓர் பொருளில் அதிகமாகப் பற்று உண்டானல் அவர்கள் விவேகத்தையும்தள்ளி அவர்களுக்கும் தங்கள் ருசிபோல் தப்புத்தோற்றமுண்டாகலாம். நல்ல வெளிச்சம் தெரியாத இடத்தில் பாம்பைப் பழுதைஎன்று நினைத்ததைத் தப்பென்று தாமே தெளிந்து திருத்திக்கொள்ள வல்லவரும், கண்ணைப் பறிக்கும் மின்னல் வெளிச்சத்தால் மறுபடியும் பாம்பைப் பழுதையென்றே க்ரஹித்து ஒதுங்கிப்போகாமல் கெடுதியை அடையலாம். தப்பான ஆசைகளால் நற்குலத்தோரும் விடர்களாகக் காணப்படலாம். (48)

நான்காவது துர்வ்ருத்தபத்ததி முற்றிற்று.

ஐந்தாவது அஸேவ்ய பத்ததி.

(ஸேவிக்கத் தகாதவர் வழி.)

கடிநஃ க்ருஶமூலஶ்ச து³ர்லபோ⁴ த³க்ஷிணேதரஃ ।
கஶ்சித் கல்யாணகாத்ரோঽபி மநுஷ்யைர்நோபஜீவ்யதே ॥

கடிந: க்ருசமூலஸ்ச துர்லபோ தக்ஷிணேதர: ।
கஸ்சித் கல்யாணகாத்ரோऽபி மநுஷ்யை: நோபஜீவ்யதே ॥

(ப-ரை) கடிநஃ [கடிந:] - கெட்டியாயும், (தயையில்லாதவனும்), க்ருஶமூலஃ [க்ருசமூல:] - அடி சிறுத்ததாயும், (மிகக் குறைந்தமூலதனமுடையவனையும்), து³ர்லபஃ [துர்லப:] - கிடைப்பதற்கரிதாயும், (ஸௌலப்யம் இல்லாதவனும்), த³க்ஷிணேதரஃ [தக்ஷிணேதர:] - தெற்குத் திக்கல்லாத வடக்காயும், (தாக்ஷிண்யமற்று அதற்கு விரோதியாயும்) உள்ள, கஶ்சித் [கஸ்சித்] - ஒன்று, (ஒருவன்), கல்யாணகாத்ரோঽபி [கல்யாணகாத்ரோऽபி] - ஸ்வர்ணமயமான உருவுடைய மேருவானலும், (ஸௌம்யமான உருவத்தை உடையவனயினும்), மநுஷ்யைஃ [மநுஷ்யை:] - மநுஷ்யர்களால், ந உபஜீவ்யதே ஆச்ரயிக்கப்படுவதில்லை.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— ஐந்தாவது பத்ததியோடு துர்ஜனஸ்வபாவங்களை முடித்து, மேல் ஏழு பத்ததிகளில் உத்தமர் ஸ்வபாவங்களைக் காட்டப்போகிறார். வைராக்யபஞ்சகத்தில் தனத்திற்காக துர்ஜனஸேவையை வெறுத்ததுபோல் இங்கே நிரூபணம். பரத்வத்தோடு ஸௌலப்யமும் நிறைந்த ப்ரபுவை ஸேவிப்பது பரமபோக்யம். இரண்டில் ஒன்று இல்லையாயினும் ஸேவிக்கத்தக்கவரல்லர்.

மேரு முழுத்தங்கமலை. தங்கம் இரும்பினும் கனம், கடினம். தங்கமயமான மேருவிற்கு தனத்தால் பரத்வம் உண்டு. ஆயினும், அது மநுஷ்யராலடையக்கூடியபடி ஸுலபமன்று. அது எப்படி கனமோ, அப்படி நிர்தயகடினராயிருப்பாரை ஸேவிக்கமுடியாது. தயையின் ப்ராதாந்யத்தை முதல் பதத்தால் காட்டுகிறார். மேருவுக்கு மூலம் (அடி) சிறுத்திருக்கும். மூலதனமில்லாத ப்ரபுவை ஸேவித்தால் சம்பளமும் கிடைப்பது அரிது. தாக்ஷிண்யமில்லாத ப்ரபுவின் ஸேவை ஸங்கடம். தாக்ஷிண்யஸம்பந்நனுகப் பிறந்த ராமன்போன்ற ப்ரபு ஸேவ்யர். காத்ரம் கல்யாணமாயிருந்தால் போதாது. உள்ளம் தக்ஷிணமும் தயார்த்ரமுமாயிருக்கவேணும். தங்கமலையான மேரு மநுஷ்யருக்கு நெருங்கக்கூடியதன்று. ஆகையால்தான் பூமியை 4000, 5000 கஜங்கள் வெட்டித் தங்கமெடுக்கிறார்கள். ஈச்வரனிடம் ஸேவிக்கத்தக்க எல்லா கல்யாணகுணங்களுமுண்டு. அவரை ஸேவிப்பது நாய்வ்ருத்தியாகாது. ஸர்வோத்க்ருஷ்டமான இன்பமேயாகும். 'கல்யாணகாத்ரம்' என்பதால், 'கல்யாணகுணமல்லவோ அவச்யம்' என்று ஸூசிக்கிறார். கல்யாணகுணஸ்வரூபர். (49)

த்³ருஷ்டப⁴ங்கா³ ப்ரதிபத³ம் ஸ்யாத³ல்பஸரஸஃ ஸ்தி²திஃ ।
காலே க⁴நரஸைர்யோகே³ঽப்யஸேவ்யா ஜீவிதார்தி²பி⁴ஃ ॥

த்ருஷ்டபங்கா ப்ரதிபதம் ஸ்யாதல்பஸரஸ: ஸ்திதி: ।
காலே கநரஸைர்யோகேऽபி அஸேவ்யா ஜீவிதார்த்திபி: ॥ (50)

(ப-ரை) ப்ரதிபத³ம் [ப்ரதிபதம்] - கால் வைக்கக் கால் வைக்க, ஒவ்வொரு கோடையிலும் (மறுபடியும் மறுபடியும்), த்³ருஷ்டப⁴ங்கா³ [த்ருஷ்டபங்கா] - சேர் தெரிவதாக (சேற்றைப் போல மலிநஸ்வபாவத்தை ப்ரகாசப்படுத்தும்), அல்பஸரஸஃ ஸ்தி²திஃ [அல்ப ஸரஸ: ஸ்திதி:] - சிறு குட்டையின் ஸ்வரூபம்

(கொஞ்சமே ஸரஸமும், விரஸமே அதிகமுமானவரின் தன்மை), காலெ [காலே]-மழைகாலத்தில் (ஓரோர் ஸமயத்தில்), வநர ஸெஃ [கநரஸை:] - மேகவர்ஷங்களால் (நல்ல தயாரஸங்களோடு), யொமெவி [யோகேபி]-கூடினாலும், ஜீவிதாமி-ஃஸீ: [ஜீவிதார்த்திபி:] - பிழைப்பை விரும்புவரால், அஸெவ்யா [அஸேவ்யா] - ஸேவிக்கத்தக்கதில்லை.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— சிறு குட்டைகள் அல்பஸாரஸ்யம் மட்டுமேயுள்ள ப்ரபுக்களுக்கு உவமையாகும். அநேகமாக ரஸமற்றவராய் உலர்ந்திருப்பர். மழைபெய்து சிறு குட்டையில் அதிக ரஸவர்ஷமிருப்பது கொஞ்சகாலமே. அந்த ரஸமும் சீக்கிரம் வெயில் உஷ்ணத்தால் (கோபதாபத்தால்) உலர்ந்துபோகும். மழைரஸமுள்ளபோதும் கால் வைக்க வைக்க சேராயிருக்கும்; ரஸவர்ஷமிருக்கும் கொஞ்சகாலத்திலும் சேரு போன்ற கெடுதலும் கலங்கேயிருக்கும். சிறுகுட்டையின் ஸ்வல்ப ஜலத்தை நம்பி, பயிரிட்டு ஜீவிக்கமுடியாது. மழை பெய்து நிரம்பியபோதும் இரங்கினல் சேற்றில் பதிந்து உயிருக்கு அபாயமும் நேரும். (50)

ஸதஃ ஸத்வவிஹீநாநாம் ஸத்வெயவாபராய்யதஃ ।
கமுஂகாரஂ ப்ரதீகாரஃ கல்பகொடிஶதெரவி ॥ ௫௧ ॥

ஸத: ஸத்வவிஹீநாநாம் ஸத்தயைவாபராத்யத: ।
கதங்காரம் ப்ரதீகார: கல்பகோடிசதைரபி ॥ (51)

(ப-ரை) ஸத்தயெவ [ஸத்தயைவ]-நற்குணத்தாலேயே (தானிருப்பதனாலேயே), அபராய்யதஃ [அபராத்யத:]-விரோதிப்பதான, ஸதஃ [ஸத:] - ஸத்தான ஸாதுவுக்கு (ஓர் ஹாவப் பொருளுக்கு), ஸத்வவிஹீநாநாம் [ஸத்வவிஹீநாநாம்]-ஸாதுகுணமில்லாதவரோடு (அந்த பாவப்பொருளின் இல்லாமையான அபாவங்களோடு, நேர்விரோதிப்பொருளோடு), கமுஂகாரஂ [கதங்காரம்] - எப்படி, எவ்வழியில், கல்பகொடிஶதெரவி [கல்பகோடிசதைரபி] - நூறு கோடி கல்பங்களானாலும், ப்ரதீகாரஃ [ப்ரதீகார:]-விரோதத்தைப்பரிஹரித்து (சேர்த்து வைக்கக்கூடும்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ஸாதுக்களையும் துர்ஜனரையும் சேர்க்கமுடியாது. ஸாதுஜனத்தை நலிவதே துர்ஜநர் ஸ்வபாவம். ஸாதுக்கள் சத்ருத்வத்தை நினையார், பாராட்டார். ஆயினும் துர்ஜனர் ஸாதுஹிம்ஸையையே ஸ்வபாவமாகக் கொண்டவர். அத்யந்தம் நேர் எதிரிடையும், பரஸ்பரவிருத்தமுமான ஸ்வபாவமுடையாரை எப்படி ஒன்றுசேர்க்கக்கூடும்? ஓர் குணத்தையும் அதன் இல்லாமையையும் (அபாவத்தையும்) ஓரேபொருளிலொன்றுசேர்ப்பது அஸாத்யமேயாம். இருட்டும் வெளிச்சமும் போன்ற ஸஹஜசத்துருக்களையும் (பரஸ்பராபாவங்களையும்) மத்யஸ்தம் செய்து (ஸமாதானம் செய்து) சேர்த்துவைக்கமுடியாது. ஸங்கல்பஸூர்யோதயத்தில், விஷயகாமத்திற்கும் விரக்திக்கும் ராஜிபண்ணி சண்டையில்லாமற் செய்யலாமோவென்ற ஆசைக்கிடமில்லையென்று காட்ட இந்த ச்லோகம் படித்துளது.

அவி ஸஂதாபஶமநாஃ ஶுத்தாஃ ஸுரபிஶீதலாஃ ।
புஜஙஸஂகாஜ்ஜாயந்தெ பீஷணாஶ்சந்தநத்ருமாஃ ॥ ௫௨ ॥

அபிஸந்தாபசமநா: சுத்தா: ஸுரபிசீதளா: ।
புஜங்கஸங்காஜ்ஜாயந்தே பீஷணா: சந்தநத்ருமா: ॥ (52)

(ப-ரை) சந்தநத்ருமாஃ [சந்தனத்ருமா:] - சந்தனமரங்கள் (சந்தனவ்ருக்ஷம் போன்ற உதார ப்ரபுக்கள்), ஸஂதாபஶமநாஃ [ஸந்தாபசமநா:]-தாபத்தைப்போக்குவதாயும், ஶுத்தாஃ [சுத்தா:] - சுத்தமாயும், ஸுரபிஶீதலாஃ [ஸுரபிசீதளா:]- ஸுகந்தமாயும் குளிர்ச்சியாயும், அவி [அபி] - இருந்தாலும், புஜஙஸஂகாத் [புஜங்கஸங்காத்] - பாம்புகளின் சேர்க்கையால் (விடர்களின் ஸஹவாஸத்தால்), பீஷணாஃ [பீஷணா:] - பயங்கரராக, ஜாயந்தெ [ஜாயந்தே] - ஆவார்.

அவதாரிகைக்களுடன் தாத்பர்யங்கள்- தன் ஸ்வபாவத்தாலே குணக்குறைவும், தோஷமிகுதியுமுள்ள ப்ரபுக்கள் ஸேவிக்கத் தக்கவரல்லவென்றார் முன்பு. ஸ்வயம் நற்குணம் நிறைந்திருந்தாலும், ஸர்ப்பம்போன்ற விஷமரின் சேர்க்கையால் நடுங்கத் தக்கவராவார். அகிலஹேய ப்ரதிபடரான ஈச்வரன்போன்ற ப்ரபுதான் ஸேவ்யராவார். ஹரியென்னும் பெருமானைக் குளிர்ந்த நிழல் ஸுகத்தையளிக்கும் ஹரிசந்தனமென்பர். ஆனல் அது

அப்பெயருடைய ஓர் தேவவ்ருக்ஷமான கல்பவ்ருக்ஷம். ஸாதுக்களுக்கெல்லாம் நிவாஸவ்ருக்ஷமென்பர் ராமனை. அவரும் துர்முகன் தெரிவித்த லோகோபவாதத்தைக் கேட்டதும் மடியில் தூங்கிக்கொண்டிருந்த ஸீதையைக் கீழே இரக்கிவிட்டுக் காட்டுக்கனுப்ப ஸங்கல்பித்து அழும்போது 'சந்தனவ்ருக்ஷமெனும் ப்ராந்தியால் துர்விபாகமான விஷவ்ருக்ஷத்தையாச்ரயித்தாயே' என்று சொல்லியழுகிறார் பவபூதிநாடகத்தில். சந்தனவ்ருக்ஷத்தில் ஸர்ப்பங்களுமிருக்குமாதலால், அது ஆச்ரயிக்கத்தக்கதன்று; அதுவுமல்லாமல் நடுங்கத்தக்கது என்று இங்கே நிரூபணம். 'வெயிலால் தபிக்கும் பெண்பாம்பு சந்தனவ்ருக்ஷத்தினிடமோடியடைந்து ஸுகிப்பதுபோல காமவெய்யிலால் தபித்த பெண்பாம்புபோன்ற சூர்ப்பணகை ராகவனெனும் சந்தனவ்ருக்ஷத்தை யணுகினாள்' என்றார் காளிதாஸர். பாம்புஸ்வபாவமுடைய அவள் அவரைச் சந்தனமரமாக நினைத்தாளென்பது ரஸம். சந்தனமரத்திற்குள்ள நல்ல வாஸனை, குளிர்ச்சி, சுத்தி, தாபத்தைப்போக்குதல் முதலிய நற்குணங்களிருப்பினும், புஜங்கமென்று பெயரையுடைய விடபுருஷர் சேர்க்கையிருக்குமாயின் அவரைக்கண்டு நடுங்க ப்ராப்தம். ஸர்ப்பவிஷம் யாரைத்தொடுமோ, அவரைக்கொல்லும்; புஜங்கரான கோழிச்சொல்லுபவருடைய கோழ்கள், யஜமானன் காதைத் தொடும், புகார் சொல்லப்படுபவரைத் தொடாமலே கொல்லுமென்பர். 'மஹத்ஸேவை, முக்திக்கு த்வாரமென்பர்; ஸ்திரீஸங்கியான விடரின் ஸங்கம் தமஸிற்கு த்வாரம்' என்றார் சுகர். ஸ்திரீஸங்கத்திலும் ஸ்திரீஸங்கியான விடரின் ஸங்கம் மிகக் கொடியதென்பது ரஸம். (52)

நீசாநுஸரணாந்மந்யே நிஸர்க்கபரிசுத்தயோ: ।
கதி: குடிலதாம் யாதி கங்காயமுனயோரபி ॥ ॥ ௫௩ ॥

நீசாநுஸரணாந்மந்யே நிஸர்க்கபரிசுத்தயோ: 1
கதி: குடிலதாம் யாதி கங்காயமுனயோரபி ll (53)

(ப-ரை) நிஸர்க்கபரிசுத்தயோ: [நிஸர்க்கபரிசுத்தயோ:] - ஸ்வபாவத்தால் மிகவும் சுத்தமான, கங்காயமுநயோரபி [கங்காயமுநயோரபி] - கங்கை யமுனை இவ்விரண்டு புண்யநதிகளுக்கும், நீசாநுஸரணாத் [நீசாநுஸரணாத்] - தாழ்ந்ததை(பள்ளத்தை)அநுஸரிப்பதால் (நீசரையநுஸரித்து செல்லுவதால்), கதி: [கதி:] - ஓடுதல் (நடத்தை), குடிலதாம் [குடிலதாம்] - வக்ரத்தன்மையை, யாதி [யாதி]-அடைகிறதென்று, மந்யே [மந்யே]-உத்ப்ரேக்ஷிக்கலாம்(நினைக்கலாம்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— துஷ்டரைச் சேர்த்துக்கொண்டு அவரையநுஸரிப்பவர் பயங்கரரென்றார். ஸாதுஸங்கமுமிருந்தால் துஷ்டஸங்கமம் பயங்கரமாகாமலிருக்குமோ என்று சங்கை. உத்தமமான ஸாதுவுடன் ஸங்கமமிருந்தாலும், நீசரையநுஸரித்தால் இரண்டு ஸாதுக்களும் வக்ரகதியுடையவராவார்; பயங்கரச்சுழல்களால் பயங்கரராவாரென்கிறார். கங்கை எத்தனை புனிதம், யமுனை எத்தனை புநிதம், இரண்டு நதிகளும் ஸ்வயம் அத்யந்த பரிசுத்தங்களே; அவ்விரண்டின் ஸங்கமம் இன்னம் மிக்க பரிசுத்தம். ஆயினும் இந்நதிகள் நீசத்தை (பள்ளத்தை) யநுஸரித்தோடும். அதனால் இவ்விரண்டு நதிகளும் நீசாநுஸாரமாக ஸங்கமத்தில் சேருகையிலும் பயங்கரமான வக்ரச்சுழல்களையுடையன, கிட்ட அணுகப் பயங்கரமானவை. உத்தம ஸாதுஸங்கமிருந்தாலும் நீசாநுஸரணமிருந்தால் பயங்கரரே. முன் ச்லோகத்தில் சொன்ன ஸர்ப்பங்களுக்கு வக்ரகதி. இங்கே ஸாதுவான ப்ரபுவுக்கே வக்ரகதி வருகிறதைக் காட்டுகிறார். (53)

மித்ரே பவதி வைமுக்யம் மைத்ரீ தோஷாகரேண ச ।
அபி தீர்த்தப்ரஸூதாநாம் கைரவாணாம் ரஜோஜுஷாம் ॥

மித்ரே பவதி வைமுக்யம் மைத்ரீ தோஷாகரேண ச 1
அபி தீர்த்த ப்ரஸூதாநாம் கைரவாணும் ரஜோப்ருதாம் ll (54)

(ப-ரை) தீர்த்தப்ரஸூதாநாம் அபி [தீர்த்தப்ரஸூதாநாம் அபி] - புண்யதீர்த்தத்தில் பிறந்தபோதிலும் (புண்ய பூமியிலோ, குருக்களான பெரியோருதரத்திலோ நற்பிறவியுடையரானாலும்), ரஜோஜுஷாம் [ரஜோப்ருதாம்] - தூளியையுடைய (ரஜோகுணத்தையுமுடைய), கைரவாணாம் [கைரவாணும்] - ஆம்பல்களுக்கு (ஆம்பலைப்போன்ற வெண்மையானவருககு), மித்ரே [மித்ரே] - ஸூர்யனிடம் (தன்னிடம் ஸ்நேஹமாயிருப்பவரிடம்), வைமுக்யம் [வைமுக்யம்] - முகத்திருப்பலும் (ஸ்நேஹமில்லாமையும்), தோஷாகரேண [தோஷா

18991
Chennai-600 ...
... N37.39

ஷாகரேண] - சந்திரனேடு (தோஷக்களஞ்சியமான துர்ஜந னிடம்), மைத்ரீ [மைத்ரீ] - ஸ்நேஹமும், ஹவதி [பவதி] - ஏற்படுகிறது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— நல்ல க்ஷேத்ரத்தில் பிறந்தாலும், ரஜோகுணமிருந்தால் தம்மிடம் ஸஹஜஸ்நேஹத் தையுடைய மித்திரரிடம் ஸ்நேஹமில்லாமையும், தோஷநிதிகளி டம் ஸ்நேஹமும் ஏற்படும். அதற்குக் காரணம் ரஜஸ் என்னும் ரஜோகுணம். உயர்பிறவிமட்டும் போதாது. ஆம்பல்பூ வெண்மை யாயிருக்கும், நல்ல தீர்த்தத்திற் பிறந்ததே. ஆயினும் அது மித் ரனென்னும் ஸூர்யனைக்கண்டதும் முகத்தைத் திருப்பிக்கொள் ளும்; தோஷாகரனென்னும் சந்திரனைக் கண்டதும்மகிழ்ந்து ப்ரி யமான பந்துவினிடம்போல ஸ்நேஹம்பாராட்டும். அதற்குக் கார ணம்அப்பூவிலுள்ள ரஜஸ்என்னும் புஷ்பதூளியென்றுவேடிக்கை யாகப் பேசுகிறார். ரஜஸ் என்று பெயருடைய தூளிகூட இப்படி விபரீதத்தன்மைக்குக் காரணமாகுமென்று வேடிக்கை. 'ரஜஸ்' என்று பெயர்கூட அத்தனை கொடியது. இந்திரபுத்திரனாகிய வாலி தேவேந்திரனிடம் பிறந்தவனே, ஆயினும் தோஷாகர னான ராவணனிடம் அவனுக்கு மைத்ரீ; மித்ரபுத்ரனான ஸுக்ரீ வனிடம் வைமுக்யம்; மித்ரகுலமான ராமனிடம் வைமுக்யம். இதற்கெல்லாம் காரணம் ரஜோகுணம். (54)

அபி நிர்முக்தபோகேந ஸ்வாந்தஸ்த விஷயேக்ஷயா ।
அஸத்பாவாய ஜாயேத ஜிஹ்மகேந ஸஹாஸிகா ॥ ௫௫ ॥

அபி நிர்முக்தபோகேந ஸ்வாந்தஸ்த விஷயேக்ஷயா I
அஸத்பாவாய ஜாயேத ஜிஹ்மகேந ஸஹாஸிகா II (55)

(பதவுரை) நிர்முக்தபோகேந அபி [நிர்முக்தபோகேந அபி] - சட்டையைக் கழற்றியெறிந்ததானாலும் (ஸம்ஸாரஸு கங்களை விட்டு தவசிவேடம் பூண்ட), ஜிஹ்மகேந [ஜிஹ்மகேந]- பாம்போடு (வக்ரமான தன்மையுடையவனோடு), ஸஹாஸிகா [ஸஹாஸிகா] - கூடவிருப்பது, ஸ்வாந்தஸ்தவிஷயாக்ஷயா [ஸ்வாந்தஸ்தவிஷயா ஈக்ஷயா] - உள்ளே விஷத்தோடு கூடிய கொடிய பார்வையால் (ஸ்வாந்தஸ்தவிஷயேக்ஷயா [ஸ்வாந்தஸ்த விஷயேக்ஷயா] - நெஞ்சிலுள்ள ஆசை வைத்திருக்கும் இன்ப

விஷயத்தை த்யானிப்பதால்). அஸத்பாவாய [அஸத்பாவாய] - முடிதலின்பொருட்டு (கெட்ட தன்மையடையும்படி), ஜாயேத [ஜாயேத] - ஆகும் (காரணமாகும்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— சிலர் தவவேடம் பூண்ட துறவிகளாயிருப்பர்; போகங்களைத் தள்ளிக் காஷாயம் பூண்டாலும் உள்ளே ஹேயமான ஆசைகளைக்கொண்டு பக்கத்தி லுள்ள ஸ்திரீ முதலியவரைத் துஷ்டக்கண்களோடு மிக்க ராகத் துடன் பார்ப்பர். அவர்கள் ஸஹவாஸமே அபாயகரம். போக மென்னும் சட்டையைக் கழற்றின பாம்பானாலும் பக்கத்திலுள்ள ப்ராணியை விஷக்கண்ணோடு க்ரூரமாய்ப் பார்த்துச் சீறித்தீண்டி முடிக்கும். போகத்தைக் கழற்றிய பாம்பைப்போன்றவர் போகங் களை விட்டும் வக்ரஸ்வபாவமாயிருக்கும் துறவிகள். (55)

மண்டூகராவிணம் ஸர்ப்பம் கோமுகம் ச ம்ருகாதிநம் ।
ந ஸுஹ்ருத்த்வேந மந்யேத மாநயந்தம் ச வைரிணம் ॥

மண்டூகராவிணம் ஸர்ப்பம் கோமுகம் ச ம்ருகாதிநம் I
ந ஸுஹ்ருத்த்வேந மந்யேத மாநயந்தம் ச வைரிணம் II (56)

(பதவுரை) மண்டூகராவிணம் [மண்டூகராவிணம்] - தவளை யைப்போலவே சப்திக்கத்தெரிந்து சப்திக்கும், ஸர்ப்பம் [ஸர்ப் பம்] - பாம்பையும், கோமுகம் [கோமுகம்] - பசுவின் முகம் போன்ற முகத்தையுடைய, ம்ருகாதிநம் [ம்ருகாதிநம்]-புலியை யும், மாநயந்தம் [மாநயந்தம்] - பூஜையையும் கௌரவத்தையும் (விசேஷமாகச்) செய்யும், வைரிணம் ச [வைரிணம் ச] - சத் ருவையும், ஸுஹ்ருத்த்வேந [ஸுஹ்ருத்த்வேந]-மித்திரனென்று (நல்ல எண்ணத்தையுடையவனென்று), ந மந்யேத [ந மந் யேத] - நினைக்கக்கூடாது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— தவசிவேடம் பூண்ட கொடியரை நம்பலாகாதென்றார். சத்துருவாயிருப்பவர் ஸுஹ் ருத்தைப்போல நடித்து விசேஷமர்யாதைகளைச் செய்பவரா னால் அவர்களை நம்பலாகாது. சாணக்யன் சந்தனதாஸனை விசேஷ கௌரவமாகப் பேசுகையில் சத்ரு மர்யாதை செய்வதை நம்பக் கூடாதென்று நினைத்தான். மித்ரவேஷத்தை நடிக்கும் சத்ரு விடம் மிக்க பயமிருக்கவேணும்; சத்ருத்வத்தையே நடத்திவரும்

சத்ருவிடம் அத்தனை பயம் வேண்டியதில்லை. தவளை, தவளையைப் போலவே கத்தத்தெரிந்த பாம்பை இருட்டில் தவளையென்று நினைத்து நெருங்க, அது பாம்பினால் விழுங்கப்படும். புலிகளில் பசுமுகமுள்ள புலிகளுண்டு. பசுவென்ற நினைப்புடன் பசுக்களும் மநுஷ்யர்களும் நெருங்கினால் அவர்களைக் கொன்று தின்னும். (56)

𑌘𑍋𑌰𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌿𑌥𑍋 𑌵𑍈𑌰𑌾𑌃 𑌸𑍌𑌕𑌰𑍍𑌯𑌵𑌦𑍁𑌪𑌦𑍍𑌰𑌵𑍇 ।
𑌦𑌣𑍍𑌡𑍇𑌨𑌾𑌪𑌿 𑌨 𑌭𑌜𑍍𑌯𑍇𑌰𑌨𑍍 𑌪𑌾𑌪𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌿𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌃 ॥ ௫௭ ॥

கோராஸ்த்யக்தமிதோ வைரா: ஸௌகர்யவதுபத்ரவே ।
தண்டேனாபி ந பஜ்யேரன் பாபகுண்டலிமண்டலா: ॥ (57)

(ப-ரை) 𑌘𑍋𑌰𑌾𑌃 [கோரா:] - கொடிய துஷ்டமான, 𑌪𑌾𑌪𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌿𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌃 [பாபகுண்டலிமண்டலாஃ] - பாபச் செய்கையுள்ள ஸர்ப்பஸமூஹங்களை (ஸர்ப்பஸமூஹங்களைப் போன்ற கொடியவரான குண்டலம் தரித்த அரசஸமூஹமும்) துஷ்டரும் ச்வாக்களும், 𑌸𑍌𑌕𑌰𑍍𑌯𑌵𑌤𑍍 𑌉𑌪𑌦𑍍𑌰𑌵𑍇 [ஸௌகர்யவத் உபத்ரவே] - அல்ப உபத்ரவம் வந்தபோது, பன்றிகளால் புத்திற்கு உபத்ரவம் வந்தபோது, 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌿𑌥𑍋 𑌵𑍈𑌰𑌾𑌃 [த்யக்தமிதோ வைரா:] - ஒருவருக்கொருவருக்குள்ள விரோதத்தையெல்லாம் தள்ளிவிட்டு (ஒற்றுமையோடு கூடி), 𑌸𑍌𑌕𑌰𑍍𑌯𑌵𑌤𑍍 [ஸௌகர்யவத்] - பன்றிகளின் கூட்டங்களைப்போல (அநாயாஸமாக, ஸுலபமாக), 𑌦𑌣𑍍𑌡𑍇𑌨𑌾𑌪𑌿 [தண்டேநாபி] - தடியாலும் (ஸேனையினால் கூட) தண்டிப்பதாலும், 𑌨 𑌭𑌜𑍍𑌯𑍇𑌤 [ந பஜ்யேத] - முறிக்கப்படமாட்டார்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ச்வாவராஹக்ரமம் என்று ஓர் ந்யாயம். ஒன்றுக்கொன்று விரோதியாகச் சண்டை போட்டாலும் பிறரால் உபத்ரவம் வருகையில் அந்தர்விரோதத்தைத் தள்ளியெறிந்து ஒன்றுகூடி எதிர்க்கும். சிற்றரசர்கள் ஒருவருக்கொருவர் சண்டை செய்தாலும், பலமான எதிரி எல்லோர்பேரிலும் படையெடுத்துவருகையில் ஒன்றுசேர்ந்து எதிர்க்கவேணும். பாம்புகள் புத்தில் கோட்டைக்குள்போல் கூடியிருக்கும். பன்றிகள் புத்தை முட்டியழிக்கும்; பாம்புகள் கூட்டமாய் வெளியே ஓடும். துஷ்டர்கள் ஒன்றுகூடிப் பிறரை ஹிம்ஸிப்பார்

கள். பிறரை எதிர்க்கும் விஷயத்தில் தங்களுக்குள் பரஸ்பரமுள்ள விரோதத்தைவிட்டுவிட்டு ஒன்றுசேர்ந்து எதிர்ப்பார்கள். கொடிய குற்றம் செய்தவரைச் சிறைச்சாலையிலடைத்துத் தண்டித்தாலும், அவர்கள் ஒன்றுகூடி அடங்காமல் கலஹம் செய்வர்.

𑌅𑌨𑌾𑌕𑌲𑌿𑌤𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌕𑍍𑌷𑌮𑌾𑌸𑌂𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 ।
𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑍈𑌰𑍍𑌨 𑌸𑍇𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌨𑌃 ॥

அநாகலித மாநுஷ்யா: க்ஷமாஸம்ஸ்பர்சவர்ஜிதா: ।
ப்ரதிபுத்தைர் ந ஸேவ்யந்தே பூர்வதேவவிரோதிந: ॥ (58)

(ப-ரை) 𑌅𑌨𑌾𑌕𑌲𑌿𑌤𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 [அநாகலிதமாநுஷ்யா:] - மனுஷ்யர்களை அலக்ஷ்யம் செய்து அவர்களைப் பசுக்களாகப்பாவிப்பவரும், (மனுஷ்யரின் தன்மையை யநுஸரிக்காமல், அவர்களுக்குக் கொடுமை செய்பவரும்), 𑌕𑍍𑌷𑌮𑌾𑌸𑌂𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 [க்ஷமாஸம்ஸ்பர்சவர்ஜிதாஃ] - பூமியிற் கால் படாதவரும் (பொறுமைகுணமே கிட்ட அணுகாதவரும்), 𑌪𑍂𑌰𑍍𑌵𑌦𑍇𑌵 𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌨𑌃 [பூர்வதேவ விரோதிநஃ] - பூர்வதேவரென்னும் ராக்ஷஸர்களுக்கு விரோதிகளுமான தேவர்கள் (பூர்வம் தேவவிரோதிகளாய், இப்பொழுது மனுஷ்யர்களுக்கு விரோதிகளுமான ராக்ஷஸர்கள்), 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑍈𑌃 [ப்ரதிபுத்தைஃ]- மோக்ஷத்தை விரும்பும் ஞானிகளால் (விவேகிகளால்), 𑌨 𑌸𑍇𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 [ந ஸேவ்யந்தே] - ஸேவிக்கப்படுவதில்லை.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்- பூர்வதேவர்களென்று ராக்ஷஸர்களுக்குப் பெயர். அவர்களுக்கு விரோதிகள் தேவர்கள். தேவர்கள் பூமியில் தங்கள்பாதத்தைத் தொடவிடமாட்டார். அத்தனை கர்வம். மனுஷ்யர்களை அவர்கள் பசுவைப்போலப் பார்ப்பவர்; பசுவைக் கறப்பதுபோல் அவர்களைக் கறப்பர்; அவர்களிடம் வேலை வாங்குவர். மோக்ஷார்த்திகள் இந்த தேவர்களை ஸேவிக்கமாட்டார். பூர்வம் தேவவிரோதிகள் என்று பொருள்கொண்டு, இப்பொழுது த்விஜரையும் த்வேஷிப்பவர் என்று கொள்ளலாம். தேவமனுஷ்யர்களுக்கு விரோதிகள் ராக்ஷஸர்கள். அவர்கள் மானுஷ்யத்திற்கு விரோதமான ஸ்வபாவத்தையும் செய்கையையுமுடையவர்கள். அவர்கள் க்ஷமாகுணத்தையே தொடமாட்டார். அவர்களும் ஸேவிக்கத்தக்கவரல்லர்,

மோக்ஷாபேக்ஷிகளால் தேவரும் ஸேவிக்கத் தக்கவரல்லர்; முமுக்ஷுக்களுக்கு ராக்ஷஸரைப்போல தேவரும் ஸேவிக்கத்தகாதவர்.

அமித்ரே விஶ்வாஸ: ஶ்வபசகரகே ஸௌமிகரஸ:
கபாலே கங்காம்ப: கலபரிஷதங்கே ஸுஜநதா ।
பரிக்ஷீணாசாரே ஶ்ருதமநுபநீதே ச நிகம:
ஸ்வதஸ்ஸித்தாம் ஶுத்திம் த்யஜதி விபரீதம் ச பலதி ॥

அமித்ரே விச்வாஸ: ச்வபசகரகே ஸௌமிகரஸ:
கபாலே கங்காம்ப: கலபரிஷதங்கே ஸுஜநதா]
பரிக்ஷீணுசாரே ச்ருதமநுபநீதே ச நிகம:
ஸ்வதஸ்ஸித்தாம் சுத்திம் த்யஜதி விபரீதம் சபலதி]] (59)

(ப-ரை) அமித்ரே [அமித்ரே] - விரோதியினிடத்தில், விஶ்வாஸ: [விப்வாஸ:] - நம்பிக்கை (வைப்பதும்), ஶ்வபசகரகே [ஶ்வபசகரகே] - சண்டாளனுடைய பாத்திரத்தில் (வைக்கப்பட்ட), ஸௌமிகரஸ: [ஸௌமிகரஸ:] - ஸோமக்கொடியின் சாரும், கபாலே [கபாலே] - மண்டையோட்டில் (வைக்கப்பட்ட), கங்காம்ப: [கங்காம்ப:] - கங்கைஜலமும், கலபரிஷதங்கே [கலபரிஷதங்கே] - துஷ்டர்கள் கூட்டத்தினருகில் (சேர்ந்த), ஸுஜநதா [ஸுஜநதா] - நல்லோர் கூட்டமும், பரிக்ஷீணாசாரே [பரிக்ஷீணுசாரே] - நல்லொழுக்கமற்றவனிடம், ஶ்ருதம் [ச்ருதம்] - வேதப்படிப்பும், அநுபநீதே [அநுபநீதே] - உபநயனமாகாதவனிடம், நிகம: ச [நிகம: ச]- வேதமும், ஸ்வதஸ்ஸித்தாம் [ஸ்வதஸ்ஸித்தாம்] - முன்பே இயற்கையாயுள்ள, ஶுத்திம் [சுத்திம்] - பரிசுத்தத்தன்மையை(யும்), த்யஜதி [த்யஜதி] - விட்டுவிடுகிறது (இழக்கிறது), ச [ச] - அதுவுமன்றியில், விபரீதம் [விபரீதம்] - சுத்திக்கு விரோதமாக அசுத்தமாயும், பலதி [பலதி] - ஆகிறது (கொடுக்கிறது).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ஸ்வபாவத்தில் மிகப் பரிசுத்தமாயிருப்பதும் சேரத்தகாத அசுத்தச்சேர்க்கையால் முன்பிருந்த இயற்கையான சுத்தியையும் இழந்து அசுத்தமுமாகும்; சுத்தி செய்யும் தன்மையையிழந்து அசுத்தியையும்

தரும். இதற்குப் பல த்ருஷ்டாந்தங்கள் அடுக்கடுக்காய் காட்டப்படுகின்றன. விச்வாஸம் வைப்பது பலத்தைக் கொடுக்குமென்பர்; விரோதியினிடத்தில் நம்பிக்கை வைத்தால் அது கெடுதியையே விளைவிக்கும். நம்பிக்கைத்ரோஹம் விளைவது நிச்சயம். நம்பிக்கை என்பது நல்லதுதான்; ஆயினும் அதை நல்ல பாத்திரத்தில் வைக்கவேணும். ஸோமக்கொடியின் ரஸம் யாகத்தில் பானம் செய்யும்படி மிகப் பரிசுத்தமானது; அதைச் சண்டாளர் கையாடும் பாத்திரத்தில் வைத்தால், தன் சுத்தியையிழந்து அசுத்தமுமாகும். இவ்விரண்டிடங்களிலும், வைக்கும் பாத்ரதோஷத்தால் தோஷம். அப்படியே பரிசுத்தமான கங்கைநீரை மண்டையோட்டில் வைத்தால், அது அசுத்தமாகும். துஷ்டர்கள் கூட்டத்துநடுவில் நல்லோர் கலந்தால், அவர்களும் துஷ்டஸம்ஸர்க்கத்தால் தோஷத்தை அடையலாகும். ஆசாரமற்றவனிடமுள்ள வேதக்கல்வியும், வேதாத்யயனத்திற்கு அதிகாரமில்லாத (உபநயனமில்லாத) வனிடம் வேதமும் அப்படியே அசுத்தமாகும். (59)

தரது விவித்ஸயாப்திமதிரோஹது ஶைலதடம்
தமது ச தாதுவர்கமதிகச்சது ஶஸ்த்ரமுகம் ।
ததிதமருந்துதம் யதுத பஹ்வவதாய ஹியா
தனமதமேதுர க்ஷிதிப்ருதங்கண ஸங்க்ரமணம் ॥ ॥ ௬௦ ॥

தரது விவித்ஸயாப்திம் அதிரோஹது சைலதடம்
தமது ச தாதுவர்க்கம் அதிகச்சது சஸ்த்ரமுகம்]
ததிதம் அருந்துதம் யதுத பஹ்வவதாய பியா
தனமதமேதுர க்ஷிதிப்ருதங்கண சங்க்ரமணம்]] (60)

(ப-ரை) விவித்ஸயா [விவித்ஸயா] - த்ரவ்யம் ஸம்பாதிக்கும் ஆசையினுல், அப்திம் [அப்திம்]-கடலை, தரது [தரது]- தாண்டட்டும், ஶைலதடம் [சைலதடம்] - மலைத்தடத்தை, அதிரோஹது [அதிரோஹது] - ஏறட்டும், தாதுவர்கம் [தாதுவர்கம்] - லோஹங்களை, (லோஹக்கனிகளை), தமது ச [தமது ச] - தங்கமாக்க ஊதிப் புடம்போடட்டும் (உருக்கட்டும்), ஶஸ்த்ரமுகம் [சஸ்த்ரமுகம்] - போர்க்களத்தை, அதி

அதிகச்சது [அதிகச்சது] - நுழையட்டும், ப்ரியா [ப்ரியா] - பயத்தினுல், பஹு [பஹு] - மிகவும், அவதாய [அவதாய] - ஜாக்ரதையோடு (பயத்தினுல் நடுங்கி ஒடுங்கி), ததமதமேதுர [ததமதமேதுர] - பணச்செருக்கால் கொழுப்படைந்த, க்ஷிதிப்ருதங்கண [க்ஷிதிப்ருதங்கண] - அரசர் அரண்மனை யங்கணங்களில், ஸங்க்ரமணம் [சங்க்ரமணம்] - சுற்றிச்சுற்றி நடப்பது, யதாத [யதாத] - என்பது யாதுண்டோ, ததிதம் [ததிதம்] - அந்த இவ்வியாபாரமல்லவோ, அருந்துதம் [அருந்துதம்] - அஸஹ்யமானது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— துஷ்டர் ஸ்வபாவங்களைக் காட்டும் ஐந்து பத்ததிகளும் இங்கே முடிவடைகின்றன. மேலே சான்றோர் ஸ்வபாவங்களைக்காட்டப்போகிறார். அஸேவ்ய பத்ததியும் இங்கே முடிகிறது. ஸேவிக்கத்தகாதவரை ஸேவித்துப் பொருள் ஸம்பாதிப்பது காயினும் கடையவ்ருத்தியாகும். அவர்கள் ஐச்வர்யமதத்தால் மத்தர். அவர்களென்ன சொல்வரோ என்று நடுக்கிக்கொண்டு மிக்க ஜாக்ரதையாய் உடம்பு குனிந்து நடக்கவேணும். மானத்தை அடியோடு துறக்கவேணும். மானத்தையிழப்பதைவிட, பிராணனையிழக்கக்கூடிய அபாயமுள்ள திரைகடலோடுதல், மலையேறி ஸஞ்சரித்தல், பூமிக்கடியில் சுரங்கம் செய்து கனிகளை வெட்டியுருக்குதல், போர்க்களத்தில் சம்பளத்திற்கமைந்து போர்வீரனுகுதல், இவற்றைப்பற்றிப் பணம் ஸம்பாதிக்கலாம், அதிலெல்லாம் மானம் கெடாது. ப்ராணன் போனுல்தானென்ன ? இங்கே துஷ்டபத்ததி முடிவில் நல்லோர் பத்ததிகளை ஆரம்பிக்குமுன், மேல் மஹாபுருஷபத்ததிக்கு முன், ஞானத்தையடைந்து ஸம்ஸாரஸமுத்திரத்தைத் தாண்டுவதையும், ப்ரஜ்ஞானசைலத்திலேறுவதையும், மலையேறித் தவம் புரிவதையும், ரஸாயனகாரர் புடம்போடுவதுபோல யோகத்தால் உடம்பைப் புடம் போடுவதையும் காமம் கோபம் முதலிய சத்ருக்களோடு போர்புரிவதையும் ஒருவாறு சப்தங்களால் ஸூசிப்பதும் கவனிக்கத்தக்கது. (60)

ஆருவது மஹாபுருஷபத்ததி.

ஸதாமேவ கபுஷ்பத்வம் யேஷாம் யத் ஸதஸத்வயோ: ।
ந ஜாது தஸ்ய தத்தாப்யாமிதி தேஷாம் ஸ விச்வத்ருக் ॥

ஸதாமேவ கபுஷ்பத்வம் யேஷாம் யத் ஸதஸத்வயோ: ।
ந ஜாது தஸ்ய தத்தாப்யாமிதி தேஷாம் ஸ விச்வத்ருக் ॥ (61)

(பதவுரை) யத்ஸதஸத்வயோ: [யத்ஸதஸத்வயோ:] - எந்தப் புருஷனுடைய இருப்பினுலும், இல்லாமையினுலும், யேஷாம் [யேஷாம்] - எவர்கள், (எவை), ஸதாம் ஏவ [ஸதாம் ஏவ] - வாஸ்தவத்தில் இருக்கும்பொழுதே, (நக்ஷத்திரங்களுக்கும்), கபுஷ்பத்வம் (ஏவ) [கபுஷபத்வம்] (ஏவ) - ஆகாயப்பூவைப்போல் சூன்யத்தன்மையென்ற அவஸ்தை நேரிடுமோ, தேஷாம் [தேஷாம்] - அவர்களுடைய, (அவற்றின்), தாப்யாம் [தாப்யாம்] - அந்த இருப்பு இல்லாமைகளால், தத் [தத்] - ஆகாயப் புஷ்பம்போன்ற அந்த சூன்யத்தன்மை, ந ஜாது [ந ஜாது] - (எவருக்கு) ஒருகாலும் ஏற்படுவதில்லையோ, ஸ: [ஸ:] - அவர், விச்வத்ருக் [விச்வத்ருக்] - எல்லாவற்றையும் ஸாக்ஷாத்தாகப் பார்க்கும் ஸர்வஸாக்ஷியாவார். (ஸூர்யனுவார்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— 'ஜ்ஞன், அஜ்ஞன்', 'ஈசன், அநீசன்' என்று ஜீவேச்வரர்களை வேதம் பிரித்துக் காட்டியுளது. அஜ்ஞானம் என்னும் இருட்டு நிரம்பிய அஜ்ஞர்களின் தோஷஸ்வபாவங்களை ஐந்து பத்ததிகளால் காட்டியது. ஸர்வஜ்ஞனும், ஸர்வேச்வரனும், புருஷோத்தமனுமான மஹாபுருஷனென்ன, அவன் அனுக்ரஹத்தால் அவனுக்கு ஸமமானஸ்வபாவத்தை யடையும் மஹாபுருஷர்களென்ன, இவர்களுடைய ஸ்வபாவங்களை ஏழு பத்ததிகளால் கூறுகிறார். அவித்யை, (அஜ்ஞானம்) ஐந்து பர்வங்களுடையதென்பர்: தமஸ், மோஹம், மஹாமோஹம், தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம் என்று ஐந்து பர்வம். ஏழு என்பது, ஸூர்யன் குதிரைகளின் ஸங்க்யை; ஸூர்யகிரணத்தில் ஏழுவர்ணங்களுண்டு. ஸர்வலோகங்களுக்கும் ஒரே கண்ணுன ஸூர்யனை ச்ருதிகளில் 'கண்ணுவான் மண்ணோர் விண்ணோர்க்கும்' என்

1299||

னும் ப்ரஹ்மத்திற்கு உவமையாகக் காட்டுவதுண்டு. ஸர்வஸாக்ஷியான ஈச்வரனுக்கு உவமையாகச் சொல்லக்கூடியவரான (இருட்டை நீக்குபவரான) ஸூர்யனை உபமானமாகப் பேசத்துடங்கி, ஸூர்யன் குதிரைகளின் ஸங்க்யையை ஒட்டி ஏழுபத்ததிகளால் மஹாபுருஷரின் ஸ்வபாவங்களை வர்ணிக்கத் திருவுள்ளம் பற்றி 'மஹாபுருஷபத்ததி' என்று துடங்குகிறார். எது இருந்தால் மற்றொன்று இருக்குமோ, எது இல்லாவிடில் மற்றொன்று இல்லாமற்போகுமோ, அதைக் காரணமென்றும் மற்றொன்றை அதன் கார்யமென்றும் நிச்சயிக்கலாம். காரணம் மூலப்பொருளும் ஆதாரப்பொருளுமாகும். ப்ரஹ்மம் இருந்தால்தான் உலகமிருக்கும்; ப்ரஹ்மமில்லாவிடில் உலகமிராது. ப்ரஹ்மத்தின் ஸத்தையால் உலகத்தின் ஸத்தையென்றும், ப்ரஹ்மத்தின் ப்ரகாசத்தால்தான் உலகம் ப்ரகாசிக்குமென்றும்,எல்லா வேதாந்திகளும் ஒப்புகிறார்கள். ப்ரஹ்மத்தினிச்சையால்தான் ஸர்வ சேதனசேதனங்களின் ஸத்தையும், ஸ்திதியும், ப்ரவ்ருத்தியும் ஸித்திக்கின்றன என்றும், ப்ரம்மம்தான் எல்லாப் பொருளுக்கும் ஆத்மாவான உயிரென்றும், ப்ரம்மத்தை விட்டுப் பிரித்து ஒரு பொருளும் நிற்காதென்றும் வைஷ்ணவஸித்தாந்தம். எல்லையற்ற ஆனந்தமான ஆராவமுதப் பொருள் அநுபவிக்கப்படுகையில் மற்றப் பொருள்களெல்லாம் கண்ணெடுத்துப் பார்க்கக்கூடாததும், இல்லாததுபோன்றதுமான துக்கமாகும். ப்ரஹ்மத்தின் ஒளியால்தான் ஸூர்யன்போன்ற தேஜோராசிகளும் ப்ரகாசிக்கின்றன. ப்ரஹ்மத்தின் கோடிஸூர்யப்ரகாசம்போன்ற ஜ்யோதிஸ்ஸூ அநுபவத்திற்கு வருங்கால், 'ஆதித்யஸந்நிதியில் நக்ஷத்ரம்போலே' உலகத்திற்கு ஒளியைத் தரும் ஸூர்யன் முதலிய தேஜஸ்ஸுகளெல்லாம் இல்லாததுபோலாகும். நக்ஷத்ரஸூர்ய த்ருஷ்டாந்தத்தைக் காட்டி, 'ஸூர்யனுக்கும் ஸூர்யனவான்' என்று ஸௌமித்திரை பேசியபடி ஸூர்யஸூர்யனை ப்ரஹ்மத்தின் ஒளி நம் பாக்யவசத்தால் ப்ரகாசிக்கையில் ஸூர்யாதிகளும் ஒளியற்று சூன்யம்போலாவார். 'ஆகாசபுஷ்பம்' என்பது இல்லாததைச் சொல்லும். 'ஸத்' என்பதற்கு நக்ஷத்ரம் என்றும் பொருள். எல்லாப் பொருள்களும் ஒருபடி நித்யமாயுள்ளனவாதலாலும், ஸத்துக்கு இல்லாமை வராததாலும், 'இல்லாமை' என்பது இங்கே 'ப்ரகாசியாமையை'ச் சொல்லும். ப்ரகாசமில்

லாவிடில் இல்லாததுபோலத்தான். ப்ரளயத்தில் ஸத்தாயிருக்கும் சேதனசேதனப்ரபஞ்சம் அஸத் என்று ச்ருதியில்சொல்லப்படுவதுபோல. ஆகாசப் புஷ்பம் என்பதால் நக்ஷத்ரங்கள் ஆகாசத்தில் புஷ்பங்களைப்போல் காண்பதையும் ஸூசிக்கிறார். 'விரித்த பந்தல் பிரித்தாமென மீனொளித்தன வானமே'என்றார் கம்பர். உலகநாதன் ராமன் பட்டாபிஷேகத்திற்காக ஆகாயத்தில் புஷ்பப் பந்தல் விரித்ததுபோலிருந்தது. கைகேயியின் தடையால் நின்றதும், பொழுது விடியும்போது, பட்டாபிஷேகம் நின்றுவிட்டதால் பந்தல் பிரிக்கப்பட்டு விட்டதுபோலாயிற்று என்றார். பார்ப்பவன் என்னும் ஜீவன் பார்த்துக்கொண்டிருக்கையில் பார்க்கப்படும் பொருள்கள் மாறி யழியும்; பார்ப்பவன் மட்டும் இருந்துகொண்டேயிருப்பான். ஈச்வரனென்னும் விச்வஸாக்ஷி ப்ரளயத்திலும் ஸாக்ஷியாக இருக்கிறார். ப்ரபஞ்சம் மட்டும் இல்லாததுபோலிருக்கிறது. மஹாபுருஷபத்ததியை ஆரம்பிக்கையிலேயே 'உயர்வற உயர்' என்ற திருவாய்மொழியாரம்பத்தை யனுஸரிப்பது மிக்க ரஸம். 'ஆதித்யஸந்நிதியில் நக்ஷத்ரங்களைப்போல' என்று அங்கே அனுபவம். "ந ததஸ்தி விநா யத் ஸ்யாத் மயா பூதம் சராசரம்" (என்னன்றியில் இருக்கக்கூடிய சராசரப்பொருளொன்றும் கிடையாது)என்ற கீதாவசனத்தையும் நினைக்கிறார்.

𑌸𑌂𑌨𑌿𑌯𑍋𑌗𑍇𑌨 𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑍀𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌤𑌃।
𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌨 𑌭𑌿𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌾𑌧𑍁𑌶𑌬𑍍𑌦𑌵𑌤𑍍 ॥ ௬௩ ॥

ஸந்நியோகேந சிஷ்டாநாம் வர்ணுதீனும் ஸ்வஸூத்ரத: I
ப்ரவ்ருத்திம் ச நிவ்த்ருதிம் ச ந பிந்த்யாத் ஸாதுசப்தவத் II (63)

(ப-ரை) 𑌸𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌤𑌃 [ஸ்வஸூத்ரத:] - தங்கள் தங்கள் ஸூத்திரப்படி (விதிக்கும் வ்யாகரணஸூத்ரத்தால்), 𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌂 [சிஷ்டாநாம்] - கட்டளையிடப் பட்டிருக்கிற (சேர்த்து விதிக்கப்பட்ட), 𑌵𑌰𑍍𑌣𑍀𑌨𑌾𑌂 [வர்ணுதீனும்] - வர்ணங்கள் ஆச்ரமங்கள் முதலியதின் (அகர முதலிய எழுத்துக்களின்), 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 [ப்ரவ்ருத்திம் ச] - செய்தலையும் (வருவதையும்), 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 [நிவ்ருத்திம் ச] - செய்யாமையையும் (வராததையும்), 𑌸𑌾𑌧𑍁𑌶𑌬𑍍𑌦𑌵𑌤𑍍 [ஸாதுசப்தவத்]-ஸாதுக்

களென்று பெயர் பெற்றவரைப்போல (ஒழுங்கான சப்தம் போல), 𑌨 𑌭𑌿𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 [ந பிந்த்யாத்] - மாற்றக்கூடாது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— எது இருக்கையில் பிரகாசிக்கையில், எது இருக்கமாட்டாதோ எது பிரகாசிக்கமாட்டாதோ அதைப்பற்றி முன் ச்லோகத்தில் பேசப்பட்டது. எது வருகையில் அதோடுகூட மற்றொன்றும் வந்தே தீருமோ, எது ஒதுங்கினால் அத்தோடு மற்றொன்றும்கூட ஒதுங்குமோ, அதைப்பற்றி இங்கே பேசப்படுகிறது. 'ஸந்நியோகசிஷ்டாநாம் ஸஹ வா ப்ரவ்ருத்தி: ஸஹவா நிவ்ருத்தி:' என்ற ஓர் ந்யாயம் இங்கே பேசப்படுகிறது. இருவரைச் சேர்த்துக்கூடப் படித்து எல்லோர்க்கும் ஓர் விதிக்கட்டளையோ, நிஷேதக்கட்டளையோ வ்யாகரண ஸூத்ரங்களிலோ, தர்மஸூத்ரங்களிலோ ஏற்பட்டிருந்தாலும், சேர்த்துப் படிக்கப்பட்டதில் ஒன்று வந்தால் மற்றொன்றும் வரும்; ஒன்று நீங்கினால் மற்றொன்றும் நீங்கும், வ்யாகரணத்தில் பெண்பால் விகுதிகளை விதிக்கையில் 'வநோரச' என்று ஓர் ஸூத்திரம். 'வந்' என்ற விகுதியுள்ள சப்தத்திற்குப் பெண்பால் விகுதியாக 'ஈ' என்பதும், அதற்குமுன் 'ர' என்னும் முடிவாதேசமும் வரும். 'ந' என்பதோடு முடியும் சப்தத்திற்குப் பெண்பால்விகுதியாக 'ஈ' வருமென்று மற்றோர் ஸூத்திரத்தாலேற்படுகிறது. 'வநோரச' என்றும் அதற்குப் பிறகு விதிப்பதில் 'ஈ'யையும் 'ர' என்னுமாதேசத்தையும் சேர்த்து விதித்திருக்கிறது. 'ஈ' வரும்போதுதான் அதோடு சேர்த்து விதித்த 'ர'வும் வருமென்று இந்த ந்யாயம். 'தீவந்' என்னும் சப்தத்தில் பெண்பாலில் 'ஈ' வரும்போது 'ர'வும் வரும்; 'தீவரீ' 'பஹுதீவரீ' என்று ரூபம் வரும். 'ஈ' வந்தால் வரும்; இல்லாவிடில் வராது. யஜுச்சாகிகளுக்கு முதலாவது உபாகர்மம், அந்த சாகைக்கு அதீசனை சுக்ரன் சக்தியுள்ளவனாயின் குருமௌட்யமிருந்தாலும் சுக்ரமௌட்யமிருந்தாலும் வரும். சாகாதீசனுக்குச் சக்தியில்லாவிட்டால் குரு சுக்ரமௌட்யகாலத்தில் முதலாவது உபாகர்மம் வராது. வ்யாகரணவிதிப்படி இலக்கணம் பொருந்தியதுதான் 'ஸாதுசப்தம்' (நற்சொல்) ஆகும்; இலக்கணவிதியை மீறுவது 'அஸாதுசப்தம்'. சாஸ்திரக்கட்டளையை மீறாதவர் ஸாதுக்கள். ஸாதுக்கள் செல்லும் மார்க்கத்தையே நாம் அனுவர்த்திக்கவேணும். அவர்கள் ப்ரவ்ருத்தியை

அநுஸரித்து நாமும் ப்ரவ்ருத்திக்கவேணும். அவர்கள் எதிலிருந்து ஒதுங்குகிறார்களோ, நாமும்கூட அதிலிருந்து ஒதுங்கவேணும். (62)

𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌭𑌜𑌤𑌾𑌂 𑌪𑌾𑌵𑌨𑍀𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌦𑍇 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌕𑌾𑌣𑌾𑌂 𑌸𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍 ॥

முக்தாநுகுணவ்ருத்தாநாம் பஜதாம் பாவநீம் கதிம் ।
நித்யம் விஷ்ணுபதே வ்ருத்திஸ்தாரகாணாம் ஸிதாத்மநாம் ॥

(ப-ரை) 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 [முக்தாநுகுணவ்ருத்தாநாம்] - முக்தரைப்போன்ற நல்லொழுக்கத்தை உடையவரும், (முத்துக்களைப்போல் உருண்டையாயும்,) 𑌪𑌾𑌵𑌨𑍀𑌂 𑌗𑌤𑌿𑌂 [பாவநீம் கதிம்] - பரிசுத்தம் செய்து மோக்ஷயோக்யராகச் செய்யும் உபாயத்தை, (வாயு ஸஞ்சரிக்கும் ஆகாசமார்க்கத்தில்,) 𑌭𑌜𑌤𑌾𑌂 [பஜதாம்] - அனுஷ்டிப்பவரும், (இருப்பதும்,) 𑌸𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌂 [ஸிதாத்மநாம்] - சுத்தமான மனதுடையவரும், (வெண்மையானதுமான,) 𑌤𑌾𑌰𑌕𑌾𑌣𑌾𑌂 [தாரகாணாம்] - ஸம்ஸாரத்தைத் தாண்டுவிக்கிறவர்களுக்கு, (நக்ஷத்ரங்களுக்கு,) 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 [நித்யம்] - நித்யமாக, 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌦𑍇 [விஷ்ணுபதே] - பகவான் திருவடியில், பரமபதத்தில், (ஆகாசத்தில்,) 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 [வ்ருத்தி:] - இருப்பு(ஏற்படும்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— ஸத்புருஷர்கள் என்ற ஸத்துக்கள் ஸத்தென்னும் நக்ஷத்திரத்திற்கு ஒப்பிடப்படுகிறார்கள். ஸத்புருஷர் முக்தர்களைப்போல் சுத்தமான ஒழுக்கம் உடையவர். 'அநவோ முக்தவதஸௌ'. முக்தரைப்போல ப்ரபந்நர் தீதற்றவராயிருக்கவேண்டும். வாயு ஆகாசமார்க்கத்தில் ஸஞ்சரிக்கும். நக்ஷத்ரங்களும் வாயுமார்க்கமான ஆகாசத்திலுள்ளன. 'பாவநீம் கதிம்' என்பது பரிசுத்தியையளிக்கும் சரணாகத்யுபாயத்தையும் சொல்லும். அதை அநுஷ்டித்தவர் ப்ரபந்நரான ஸத்புருஷர். அர்ச்சிராதி மார்க்கத்தில் ஆதிவாஹிகரில் பவனரென்னும் வாயுவும் ஒருவர். 'பாவநீம் கதிம்' என்பது விஷ்ணுபதத்திற்குச் சேர்ப்பிக்கும் அர்ச்சிராதிகதியையும் சொல்லும். 'ஸிதாத்மா' என்பது வெண்மையான ஸ்வரூபத்தையும்

சுத்தமான மனதுடையவரையும் சொல்லும். ஸத்துக்கள் சுத்த மனத்தோர். நக்ஷத்ரங்கள் வெண்மையானவை. 'விஷ்ணுபதம்' என்பது பெருமாள் திருவடியையும், பரமபதத்தையும், ஆகாசத்தையும் சொல்லும். 'தாரக' என்பது நக்ஷத்ரத்தையும் ஸம்ஸாரக்கடலைத் தாண்டுவிக்கிறவரையும் சொல்லும். (63)

𑌧𑌰𑍍𑌮𑌸𑍇𑌤𑍁𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌮𑌚𑌲𑌾𑌨𑌾𑌂 𑌗𑌰𑍀𑌯𑌸𑌾𑌮𑍍 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍋𑌤𑍍𑌤𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌪𑌾𑌪𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑍀 ॥ ௬௪ ॥

தர்மஸேதுநிவிஷ்டாநாம் அசலாநாம் கரீயஸாம் ।
தக்ஷிணோத்தரவ்ருத்தீநாம் த்ருஷ்டி: பாபநிவர்த்திநீ ॥ (64)

(ப-ரை) 𑌧𑌰𑍍𑌮𑌸𑍇𑌤𑍁𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌂 [தர்மஸேதுநிவிஷ்டாநாம்] - தர்மமென்னும் வரம்பிலிருந்து தவறாமல் நிலையுள்ளவரும், வடிவெடுத்த தர்மமான ராமனுடைய ஸேதுவில் வைக்கப்பட்டுள்ளதும், 𑌗𑌰𑍀𑌯𑌸𑌾𑌂 [கரீய்ஸாம்] - ஆசிரியரான பெரியோரும், (மிகப் பெரிதாயும்,) 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍋𑌤𑍍𑌤𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 [தக்ஷிணோத்தரவ்ருத்தீநாம்] - தாக்ஷிண்யத்தோடுகூடி உயர்ந்த ஸ்வபாவமுடையவரும், (தெற்கு வடக்கிலுள்ள, தென் வடலில் போடப்பட்டுள்ள, தென் தேசத்தையும் வடதேசத்தையும் சேர்ந்ததான,) 𑌅𑌚𑌲𑌾𑌨𑌾𑌂 [அசலாநாம்] - அசைக்கக் கூடாத த்ருடஸ்வபாவமுடையவரின், (மலைகளின்), 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 [த்ருஷ்டி:]- தர்சனம், கடாக்ஷம், (பார்ப்பது), 𑌪𑌾𑌪𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑍀 [பாபநிவர்த்திநீ] - பாபத்தைப் போக்கும் தன்மையுடையது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— சரணாகதி உபாயத்தையும், ஸம்ஸாரஸமுத்ரத்தைத் தாண்டுவதையும், பாபங்களைப் போக்கிப் பரிசுத்தியை அளிப்பதையும் முன் ச்லோகத்தில் பேசினதும், தர்சனமாத்ரத்தால் பாபங்களைப் போக்குவதும், ஸம்ஸாரக் கடலைத் தாண்ட உபகரிப்பதுமான ஸேது (திருவணை) புத்திக்கு வந்தது. திருவணை கட்டுகையில் "பர்வதங்களையும் பிடுங்கி யந்த்ரங்களால் கொண்டுவந்தார்கள்; அசலங்களை எறியும்பொழுது ஜலம் உயர்ந்தது. கிரிபோன்ற பாறைகளையும், கிரிசிகரங்களையும் தூக்கிக்கொண்டு" என்றும் பல மலைகளிலிருந்து பெரும் பாறைகள் பிடுங்கி ஸேதுவில் வைக்கப்பட்டதை வர்ணிக்கப்பட்டுளது. தெற்குத் திக்கிலுள்ள மலைகளிலிருந்தும்,

வடக்குத் திக்கிலுள்ள மலைகளிலிருந்தும் அனேகம் பாறைகள் கொண்டுவரப்பட்டு ஸேதுவிலிருக்கின்றன. அந்த மலைப்பாறைகளுக்கும் ஸத்புருஷருக்கும் இங்கே ஒற்றுமை காட்டப்படுகிறது. ப்ரபன்னர் பகவானுடைய ஆணையென்னும் அணையைத் தாண்டாமல் அதில் நிலைநிற்பார்; ஸேதுவில் அமைந்துள்ள பர்வதங்கள் விக்ரஹம் எடுத்த தர்மம் என்று சொல்லப்பட்ட ராமன் ஸேதுவில் நிலையுள்ளன. மஹாத்மாக்கள் 'அசலப்ரதிஷ்டிதராய்' தர்மத்தில் த்ருடமாய் அசைக்கமுடியாதவராயிருப்பர். ஸேதுவின் தர்சனமாத்ரமே பாபத்தைப் போக்குவதுபோல, தர்சனமாத்திரத்தால் ஸாதுக்கள் நம்மைப் பாவனம் செய்வார்கள். பெரியோரை நாம் காண்பதும் பாவனம்; அவர்கள் நம்மைக் கடாக்ஷிப்பதும் பாவனம். (65)

𑌅𑌨𑌙𑍍𑌗𑍀𑌕𑍃𑌤𑌕𑌾𑌮𑌾𑌨𑌾𑌮𑌨𑍁𑌮𑌾𑌨𑌾𑌰𑍍𑌹𑌵𑌰𑍍𑌷𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 ।
𑌧𑍃𑌤𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌭𑍂𑌤𑌿𑌲𑍇𑌪𑍋 𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌮𑍍 ॥

அநங்கீக்ருதகாமாநாமநுமாநார்ஹ வர்ஷ்மணாம் ।
த்ருதநிர்மலதீர்த்தாநாம் பூதிலேபோ விபூஷணம் ॥ (65)

(ப-ரை) 𑌅𑌨𑌙𑍍𑌗𑍀𑌕𑍃𑌤𑌕𑌾𑌮𑌾𑌨𑌾𑌮𑍍 [அநங்கீக்ருதகாமாநாம்] - காமத்தை வெறுத்தவரும், (காமதேவனை உடம்பில்லாமற்போகும்படி எரித்தவரும்,) 𑌅𑌨𑍁𑌮𑌾𑌨𑌾𑌰𑍍𑌹𑌵𑌰𑍍𑌷𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 [அநுமாநார்ஹவர்ஷ்மணாம்]-கண்ணுக்குக்கூடத் தெரியாதபடி மிகவும் இளைத்த உடம்பையுடையவரும், ப்ரஹ்ம தேஜஸ் ஜ்வலிப்பதால் பார்க்கக் கண் கூசும்படி ஒளியையுடையவரும், (உமை தவிர வேறொரு பெண்ணுக்கும் இடத்திற்கு யோக்யமில்லாத மேனியையுடையவரும்,) 𑌧𑍃𑌤𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 [த்ருதநிர்மலதீர்த்தாநாம்] - கசடறச் சாஸ்த்ரங்களைக் கற்று நெஞ்சில் தரிப்பவருமானவருக்கு, (பரிசுத்தமான கங்கைநீரைச் சிரஸில் தரிப்பவருமானவருக்கு,) 𑌭𑍂𑌤𑌿𑌲𑍇𑌪𑌃 [பூதிலேப:] - ஐச்வர்யத்தின் சேர்க்கையும், (விபூதிப் பூச்சும்,) 𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌂 [விபூஷணம்] - அலங்காரமாகும்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— பாபத்தைப் போக்கும் ஸேதுவையும், குருக்களையும் பற்றிப் பேசினர். ஈச்வரனை விச்வாசார்யனென்பர். ஸத்புருஷரை ஈச்வரனுக்கு ஒப்பிடு…

காமனை ஈச்வரன் தஹனம் செய்து அங்கமில்லாத அனங்கனுக்கினார்; ஸாதுக்கள் காமத்தை வெறுப்பார். 'தீர்த்தம்' என்பது சாஸ்த்ரத்திற்கும், புண்யதீர்த்தத்திற்கும் பெயர். ஸாதுக்களான பெரியோருக்கு ஐச்வர்யமிருப்பது உலகத்திற்கு க்ஷேமம். குருகுலம் வைத்துக் குலபதியாகப் பல சிஷ்யர்களுக்கு அன்னதானம் செய்வர். (65)

𑌅𑌨𑌨𑍍𑌤𑌖𑍍𑌯𑌾𑌤𑌿𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌸𑍁𑌧𑍀𑌬𑌲𑌃 ।
𑌤𑌤𑍍𑌤𑍇 𑌬𑌹𑍁𑌮𑍁𑌖𑌂 𑌭𑍋𑌗𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑍍𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌶𑌯𑌃 ॥

அநந்தக்யாதிஸம்பந்ந: சுத்தஸத்த்வஸ் ஸதீபல: I
தத்தே பஹுமுகம் போகம் ச்ருதித்ருஷ்டி: ஸ்திராசய: II (66)

(ப-ரை) 𑌅𑌨𑌨𑍍𑌤𑌖𑍍𑌯𑌾𑌤𑌿𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌃 [அநந்தக்யாதிஸம்பந்ந:] - எல்லையற்ற க்யாதியை அடைந்தவரும், (அனந்தனென்னும் பெயர் பெற்றவரும்,) 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌃 [சுத்தஸத்த்வ:] - ரஜஸ் தமஸில்லாமல் சுத்த ஸத்துவகுணமுடையவருள், 𑌸𑍁𑌧𑍀𑌬𑌲𑌃 [ஸதீபல:] - புத்திபலமுடையவரும், (ஜ்ஞானம் பலமுடையவரும்,) 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 [ச்ருதித்ருஷ்டி:] - வேதத்தைக் கண்ணாக உடையவரும், (பாம்பு வடிவை உடையவரும்,) 𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌶𑌯𑌃 [ஸ்திராசய:] - ஸ்திரமான உறுதியையுடையவரும், (ஸ்திரமான நிவாஸமும் சயனமுமானவரும், ஸ்திரையென்னும் பூமிக்கும் ஆதாரமுமானவர்,) 𑌬𑌹𑍁𑌮𑍁𑌖𑌂 [பஹுமுகம்] - அனேகவிதமான, (அனேகம் முகங்களோடுகூடிய,) 𑌭𑍋𑌗𑌂 [போகம்] - ஆனந்தத்தை, (படங்களை,) 𑌤𑌤𑍍𑌤𑍇 [தத்தே] - தரிக்கிறார்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— மஹாபுருஷருக்குச் சேஷத்வமே ஸ்வரூபம்; அநந்தனைப்போல ஸர்வவிதகைங்கர்யங்களிலும் ருசியிருக்கும். அதைக் காட்ட அவரைச் சேஷனுக்கு ஒப்பிடுகிறார். பலவிடங்களிலுமிருந்து ப்ரஹ்மசாரிகள் வித்யையைக் கிரஹிக்கவரவேணும். அவர்களுக்கு வித்யையை யளித்து, 'ஸஹநௌ யச:' என்றபடி தமக்கும் அவர்களுக்கும் யசஸானது திகந்தவிச்ராந்தமாகவேண்டும் என்று மஹாபுருஷரான ஆசிரியர் ஆசீர்ஸிப்பர். அநந்தனைப்போன்ற நாக்கு வேண்டும் பகவத்குணங்களைப் பிரவசனம் செய்ய. "ப்ரக்ருஷ்டவிஜ்ஞாந பலைகதாமநி"

என்றபடி தீயென்னும் ஜ்ஞானமும், பலமுமுடையவர் அனந்தர். இவர்களுக்கும் புத்திபலம் அதிகம். அநந்தருக்கு அனந்தமான போகங்கள் (படங்கள்). 'போகம்' என்பது படத்தையும் ஸுகத்தையும் சொல்லும். 'தயா ஸஹாஸீநம் அனந்தபோகிநி' என்ற ஆளவந்தார் ச்லோகத்திலும் அனந்தனுக்கு 'போகம்' என்னும் படம் அனந்தமாயிருப்பதுபோல 'ஸுகாநுபவமும்' அனந்தம் என்பது கருத்து. ப்ரஹ்மவித்துக்களான இவர்களுக்கு ஆநந்தம் அளவற்றது. அநந்தன்போன்ற சேஷத்வமே அநந்தபோகத்தைக் கொடுக்கும். (66)

𑌅𑌹𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌥𑌃 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌮𑍁𑌦𑍍𑌵𑌹𑌨𑍍 ।
𑌸𑌤𑍍𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍁𑌪𑌯𑌾𑌤𑌿 𑌮𑌹𑍋𑌨𑍍𑌨𑌤𑌃 ॥ ௬௭ ॥

அஹார்யஸ்ஸர்வமத்யஸ்த: காஞ்சனத்யுதிமுத்வஹந் I
ஸத்ப்ரதக்ஷிணயோக்யத்வமுபயாதி மஹோந்நத: II (67)

(ப-ரை) 𑌮𑌹𑍋𑌨𑍍𑌨𑌤𑌃 [மஹோந்நத:] - மிகவும் உயர்ந்த ஸ்வபாவமுள்ளவரும், (மிகவும் உயரமுடையதும்,) 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌂 [காஞ்சனத்யுதிம்] - இன்னதென்று வர்ணிக்கக்கூடாத காந்தியை, (பொன் காந்தியை,) 𑌉𑌦𑍍𑌵𑌹𑌨𑍍 [உத்வஹந்] - உடையவரும், 𑌸𑌰𑍍𑌵𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌥𑌃 [ஸர்வமத்யஸ்த:] - ஒருவரிடமும் பக்ஷபாதமில்லாமல், எவரிடமும் நடுவு நிலைமையுடையவரும், (முழுப்ரபஞ்சத்திற்கும் நடுவேயுள்ளதுமான,) 𑌅𑌹𑌾𑌰𑍍𑌯𑌃 [அஹார்ய:] - கலக்கக்கூடாத உறுதியை உடையவர், (பர்வதம், மஹாமேரு,) 𑌸𑌤𑍍𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾𑌂 [ஸத்ப்ரதக்ஷிணயோக்யதாம்] - ஸத்துக்களால் ப்ரதக்ஷிணம் செய்யப்படும் யோக்யதையை, (ஸத்துக்களென்னும் நக்ஷத்ரங்களால் ப்ரதக்ஷிணம் செய்யப்படும் யோக்யதையை,) 𑌉𑌪𑌯𑌾𑌤𑌿 [உபயாதி] - அடைவர். (அடைகிறது).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:- அநந்தநாகரை நமஸ்கரித்து ப்ரதக்ஷிணம் செய்வார்கள். மஹாபுருஷரையும் ஸத்துக்கள் ப்ரதக்ஷிணம் செய்வார். மஹாபுருஷரை மஹாமேருவுக்கு ஒப்பிடுகிறார். உலகத்தின் மத்யத்திலிருப்பது மஹாமேரு. இவர்கள் உலகம் முழுவதிலும் நடுவு நிலைமையைப் பற்றியிருப்பர்,

ப்ரஹ்மவித்துக்களின் காந்தியை வர்ணிக்கமுடியாது. ‘காஞ்சந’ என்பதை ‘காம் சந’ என்றும் பிரித்து ‘வர்ணிக்கமுடியாத’ என்றும் பொருள் கொள்ளவேண்டும். ‘அஹார்ய:’ என்பது பர்வதத்திற்குப் பெயர். தேஜஸ்ஸுகளான நக்ஷத்ரங்கள் மஹாமேருவை ப்ரதக்ஷிணம் செய்வதுபோல, தேஜஸ்விகளான ஸத்துக்கள் மஹாபுருஷரைப் பிரதக்ஷிணம் செய்வர். (67)

𑌪𑍁𑌣𑍍𑌯𑌗𑌨𑍍𑌧𑌾𑌃 𑌸𑍁𑌮𑌨𑌸𑌃 𑌪𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌾𑌃 𑌸𑌮𑌯𑌾𑌗𑌮𑍇 ।
𑌶𑌿𑌰𑌸𑌾 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌾𑌦𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑍈𑌰𑌪𑌿 ॥𑌸𑍁 𑌅॥

புண்யகந்தா: ஸுமநஸ: ப்ரபுத்தா: ஸமயாகமே ।
சிரஸா பரிக்ருஹ்யந்தே ஸாதரம் த்ரிதசைரபி ॥ (68)

(பதவுரை) 𑌸𑌮𑌯𑌾𑌗𑌮𑍇 [ஸமயாகமே] - ஸித்தாந்தசாஸ்த்ரங்களில், ஸித்தாந்தமான பாஞ்சராத்ராகமங்களில், (வஸந்தகாலங்களில்,) 𑌪𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌾𑌃 [ப்ரபுத்தா:] - தெளிந்த ஜ்ஞானமுடையவரும், (மலர்ந்ததும்,) 𑌪𑍁𑌣𑍍𑌯𑌗𑌨𑍍𑌧𑌾𑌃 [புண்யகந்தா:] - வெகுதூரம் பரிமளம் வீசும் புண்யச் செய்கைகளை உடையவருமான, (நல்லவாஸனையை உடையதுமான,) 𑌸𑍁𑌮𑌨𑌸𑌃 [ஸுமனஸ:] - வித்வான்கள், ப்ரஹ்மவித்துக்கள், (புஷ்பங்கள்,) 𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑍈𑌰𑌪𑌿 [த்ரிதசைரபி] - தேவர்களாலும், 𑌸𑌾𑌦𑌰𑌂 [ஸாதரம்] - ப்ரியத்தோடு, 𑌶𑌿𑌰𑌸𑌾 [சிரஸா] - தலையால், 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 [பரிக்ருஹ்யந்தே] - ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— இங்கே நல்ல ஸுகந்த புஷ்பங்களோடு உவமை. “நன்றாய்ப் புஷ்பித்த வ்ருக்ஷத்திலிருந்து எப்படி வெகுதூரத்திலும் கந்தம் கமழுமோ, அப்படியே புண்யகந்தத்தின் கந்தமும், தூரம் வீசும்” என்று வேதம் ஓதுகிறது. வேதம் காட்டும் உபமானம் இது. ப்ரஹ்மவித்துக்களுக்கு தேவர்களும் பலிகள் ஸமர்ப்பித்துப் பூஜை செய்வர் என்றும் வேதமோதுகிறது. நல்ல வாஸனைகளையுடைய புஷ்பங்களைத் தேவர்கள் க்ரஹிப்பதுபோல, ப்ரஹ்மவித்துக்களையும் தலையால் க்ரஹிக்கிறார்கள். பூமியிலுள்ள ஸத்துக்கள் ப்ரதக்ஷிணம் செய்து பூஜிக்கிறார்களென்பது முன்ச்லோகம். இங்கே தேவர்கள் தலையால் தாங்கிப் பூஜிப்பதைக் காட்டுகிறார். மிக்க ப்ரீதியோடு தாங்குகிறார்கள். இப்படி ஆதரத்திற்குக் காரணம் என்ன? ‘ஆத்மா

ஹி தேஷாம் பவதி’ (அவர்களுக்கு இவன் ஆத்மா, (உயிர்) அல்லவோ) என்பது வேதம் கூறும் பதில். (68)

𑌅𑌨𑍁𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌪𑌹𑍍𑌨𑍋𑌤𑍁𑌮𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑍁𑌮𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍁𑌮𑍍 ।
𑌅𑌶𑌕𑍍𑌯𑍇 𑌤𑍇𑌜𑌸𑌾𑌂 𑌪𑌤𑍍𑌯𑍌 𑌮𑌿𑌤𑍍𑌰𑌤𑌾𑌽𑌨𑍁𑌮𑌤𑌿𑌕𑍍𑌷𑌮𑌾 ॥

அநுகர்த்துமபஹ்நோதுமதிவர்த்திதுமீக்ஷிதும் ।
அசக்யே தேஜஸாம் பத்யௌ மித்ரதாநுமதிக்ஷமா ॥ (69)

(பதவுரை) 𑌅𑌨𑍁𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 [அநுகர்த்தும்] - அவரைப்போலாகவும், 𑌅𑌪𑌹𑍍𑌨𑍋𑌤𑍁𑌂 [அபஹ்நோதும்] - (அவர் பெருமையை இல்லையென்று மறுதளிக்கவும்,) 𑌅𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑍁𑌂 [அதிவர்த்திதும்] - தாண்டவும், 𑌈𑌕𑍍𑌷𑌿𑌤𑍁𑌂 [ஈக்ஷிதும்] - பார்க்கவும், 𑌅𑌶𑌕𑍍𑌯𑍇 [அசக்யே] - அஸாத்யமாயிருக்கும், 𑌤𑍇𑌜𑌸𑌾𑌂 𑌪𑌤𑍍𑌯𑍌 [தேஜஸாம் பத்யௌ] - தேஜோராசியான மஹாபுருஷரிடம், (தேஜோராசியான ஸூர்யனிடம்,) 𑌮𑌿𑌤𑍍𑌰𑌤𑌾 [மித்ரதா] - ஸ்நேஹத்தன்மை, (ஸூர்யனாகவே யிருக்கும் தன்மை,) 𑌅𑌨𑍁𑌮𑌤𑌿𑌕𑍍𑌷𑌮𑌾 [அநுமதிக்ஷமா] - அங்கீகரிக்கத் தக்கது. (அநுமதி என்று பெயர்கொண்ட ஓர் பௌர்ணமாஸீக்கு யோக்யம்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:- மஹாபுருஷர் ஸூர்யனைப்போன்ற தேஜஸ்விகள். அவர்கள் தேஜஸை நாம் நெருங்கமுடியாது; அபலபிக்கமுடியாது; தாண்டமுடியாது; கண்ணெடுத்துப் பார்க்கக்கூட முடியாது. சடைமுடிப் பரதனுடைய தேஜஸ் ராமனுக்கும் பார்க்கக் கூடாதபடி யுகாந்தத்தில் பாஸ்கரனைப்போல துர்தர்சமாயிருந்தது என்பது ருஷியின் வர்ணனம். மஹாபுருஷரைப் பழிப்பதையும் அவரோடு போட்டி போடுவதையும் விட்டுவிட்டு ஸ்நேஹத்துடன் பாதம் பணிந்தால் அவர்கள் கடாக்ஷத்தால் அவர்களோடு ஸாம்யத்தைப் பெறலாம். ஆத்மஸாம்யத்தைத் தருவது அவர்கள் சீலம். ‘ப்ரஹ்மத்தோடு யார் போட்டி போடக்கூடும்’ என்றுச்ருதி. ஸூர்யனோடுபோட்டிபோட்டு அவர் தேஜஸ்ஸை அடைய முடியுமோ, நெருங்கவே முடியாது. பார்க்க முடியாது. ஸூர்யன் தேஜோராசி. அவன் கிரணங்களே அப்படியே புகுந்து அநுமதியென்னும் பௌர்ணமாஸி சந்த்ரதேஜஸாகும். 15-கலைகளில் ஓர் கலைமட்டும் குறைவானது. சுக்லசதுர்தசியோடு கூடிய பௌர்ணமீ. திதி பௌர்ணமி யல்லாவிடினும், அத்திதியில் பூர்ணிமா திதிக்ரியைகள் செய்ய அநுமதிக்கப்படுவதால் அநுமதி என்று பெயர். ப்ரஹ்மமேயாக நம்மால் முடியாது. ஆனால் அவ

ருடைய ஆனந்தங்களும் குணாஷ்டகங்களும் அவரிடத்தில் மித்ர பாவத்தால் அவர் அநுக்ரஹத்தால் நமக்கு ஸித்திக்கும். ‘அநுக்ருத்தேஸ்தஸ்ய ச’ என்னும் ஸூத்ரத்தின் தீபத்தில் இந்த விஷயஸூக்ஷ்மம் நன்கு விளங்கும். மற்றோர் க்ரந்தத்தில் விஸ்தரித்திருக்கிறோம். (69)

அஹிதுண்டிகத்ருஷ்டீநாமசேஷா போகிந: பதம் ।

ந ஸம்வர்த்தாக்நிஸாரத்யே ஸ்த்தாதா யந்முகமாருத: ॥

அஹிதுண்டிகத்ருஷ்டீனுமசேஷா போகிந: பதம் I

ந ஸம்வர்த்தாக்நிஸாரத்யே ஸ்த்தாதா யந்முகமாருத: II (70)

(ப-ரை) அஹிதுண்டிகத்ருஷ்டீநாம் [அஹிதுண்டிகத்ருஷ்டீனும்] - விஷயபோகங்களில் மூழ்கும் போ்களை ஸம்ஹரிப்பதில் கண்ணுடைய ம்ருத்யு முதலியவருக்கு, (பாம்பைப் பிடிப்பதில் கண் செலுத்தும் மந்த்ரவாதிகளுக்கு,) அசேஷா: [அசேஷா:] - சேஷத்வஸ்வரூபநிஷ்டரல்லாத, (சேஷனைத் தவிர மற்ற எல்லா,) போகிந: [போகிந:] - விஷயபோகஸக்தர்கள், (பாம்புகள்,) பதம் [பதம்] - அகப்படக்கூடியவர். யந்முகமாருத: [யந்முகமாருத:] - எவருடைய வாயிலிருந்து வரும் காற்று, ஸம்வர்த்தாக்நிஸாரத்யே [ஸம்வர்த்தாக்நிஸாரத்யே] - ப்ரளயகாலத்தில் உலகத்தை எரிக்கும் அக்னிக்கு ஸஹாயமமாக, (தேர்ப்பாகனாக,) ந ஸ்த்தாதா [ந ஸ்த்தாதா] - நிற்காதோ, (அந்தப் பாம்புகள்தான் அழிக்க அகப்படும்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— போகத்தில் ஆழ்பவர் போகிகள்; அவர்கள் பாம்புபோன்றவர். இந்தப் பாம்புகளைப் பிடிப்பவர் யமனென்பவர். மஹாபுருஷர் சேஷத்வத்தில் ஆழ்ந்தவர்; சேஷனையொத்தவர். அவர்களும் ஸம்ஸாரிகளாய் இருந்தாலும், அவர்கள் சேஷனைப்போன்றவர். அவர்கள் யமனுக்கு வச்யராகமாட்டார். ப்ரளயகாலத்தில் ப்ரபஞ்சத்தை ப்ரளயம் செய்யும் அக்நிக்கு சேஷனுடைய மூச்சுக்காற்று ஸஹாயமாகும். அவர் ஸஹாயத்தைக்கொண்டு ஸமஹாரம் நடக்கவேண்டும்; ம்ருத்யுவையே ஈச்வரன் ஸம்ஹரிக்கிறார். சேஷத்வமில்லாதவர் பேரில்தான் யமனுக்கும் அவன்படர்களுக்கும் அதிகாரம். போகிகளான பாம்புகளைப் பிடித்துத் தம் வசமாக்க யமபடர்கள் கண்கள் செல்லும். முசுகுந்தர் ஸ்தோத்ரத்தில் அந்தகனைப் பாம்புக்கு ஒப்பிடப்பட்டது. (70)

லிவரைட்ஸ்.

(ரிஜிஸ்டர்ட்)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டி வியாதிகளுக்கு, உத்திரவாதமான மருந்து. டாக்டர்களால் புகழப்படுவது. எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தி லிவரைட்ஸ் கம்பெனி,

சொந்தக்காரர்கள்—

டி. என். செயினுலு அண்டு சன்ஸ்,

1/21. அய்யாமுதலித் தெரு,

சிந்தாத்ரிப்பேட்டை, சென்னை.

ஸ்ரீவிஸ் அம்லா கூந்தல் தைலம்.

ஆயுர்வேத முறைப்படி வெகுநாள் உழைத்து கண்டுபிடித்தது.

தலை சுற்றல், மூளை மந்தம், கண் எரிச்சல், தலை நோய் முதலியவைகளை எளிதில் கண்டிக்கும்.

ஸ்திரீகளின் வரப்ரசாதினி. தலைமயிரை வளரச் செய்வதோடு பளபளப்பையும், மிருது தன்மையையும் கொடுக்கும்.

எஸ் விஸ்வநாதம் கம்பெனி, பந்தர்தெரு, மதராஸ்.

தேக ஆரோக்கியம் உங்களது பிறப்புரிமையல்லவா?

மஹா சந்தனாதித் தைலம்.

அபார சக்தி வாய்ந்ததும், மூளைக்குச் சிறந்ததுமான தைலம் இது ஞாபகசக்தி யற்றவர்களுக்கும், மந்த மூளையுள்ளவர்களுக்கும் மனவருத்தம், பார்வை மந்தம், கண் எரிச்சல், தலைநோய், உச்சந்தலையில் தோல் உரிதல், வழுக்கைபோன்ற ஸகல நோய்களுக்கும் மிகச்சிறந்தது ஒரு மாதத்திற்கு உபயோகப்படக்கூடிய 12அவுன்ஸ் கொண்ட புட்டி விலை ரூ 5

உங்கள் நரம்புகளையும் மூளையையும் பலப்படுத்த ஆயர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் என். வி. ஸ்ரீராமா சார்லு அவர்களின் பிரசித்தி பெற்ற திவ்விய ஔஷதங்களை சாப்பிடுங்கள்.

"சித்தகல்ப மகரத்வஜம்" (ரிஜிஸ்டர்ட்)

எவ்வளவு கடினமான வியாதியானாலும் தவறாது கண்டிப்பதில் பொன்னைப்போல் போற்றத் தக்கது மூளை வேலை செய்பவர்களுக்கு இது வரப்பிரசாதம் ரத்தத்தைச் சுத்தி செய்வதில் மிகப் பிரசித்தி பெற்றது பூராவும் குணமடைய 60 மாத்திரை கொண்ட புட்டி விலை ரூ 10

மதருஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட், சென்னை.

ஹெட்ஆபீஸ் 289, எஸ்பிளனேட்.
கிளைஆபீஸ்.180, மவுண்ட்ரோட்.

தபால்பெட்டி 151
மதருஸ்

'ரஸாயனசாலை ஸ்ரீராமவனம் மைலாப்பூர்.
போன் 3034. தந்தி 'கல்பம்'.

TRADE MARK — SREE RAM.

உத்திரவாதமான உயர்ந்த பொருள்கள். ஒருமுறை வாங்கிப் பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்.

காஷ்மீர் எம்போரியம்

(ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.)

22. சுந்தரம் பிள்ளை சந்து, வேப்பேரி போஸ்ட், மதராஸ்.

குங்குமப்பூ	காஷ்மீர் குசம்	ப்ளவர்டு டஸ்டு	பற்பொடி, படைமருந்து
பச்சைக்கற்பூரம்	பஞ்சாப் குல்கந்து	கானூஜ் அத்தர் தினுசுகள்	நீலகிரித் தைலம்
நேபாளத்துக் கஸ்தூரி	இஞ்சி முரப்பான்	கோரோஜனை மாத்திரை	வாஸனை சோப்புகள்
கோரோஜனை	நெல்லிக்காய் முரப்பான்	கஸ்தூரி மாத்திரை	விஜயாகரம் ஸ்ரீசூரணம்
அம்பர், முத்து	ஜவ்வாது வத்தி	பன்னீர், தசாங்கம்	சுள்ளங்குடி திருமண்
ஸிலாஜித்து(டானிக்)கல்மதம்	சந்தனாதி,அரைக்கீரைத்தைலம்	சந்தன பில்லை	வயிற்று வலிச் சூரணம்
சாலாமிஸிரி	புனுகு, ஜவ்வர்து	பேரஹாம்பூர் குங்குமம்	காபூல் பால் பெருங்காயம்
அசல் கொம்புத்தேன்	அரகஜா,ஸ்நோ, பவுடர், சீப்பு	மங்களூர் குங்குமம்	மூளை குளிர்ச்சிக்கு சூர்ணம்

முதலியன.

குறிப்பு:— அதிக உழைப்பினாலும், சிற்றின்ப நுகர்ச்சியினாலும், இரத்த ஓட்டம் குறைந்து, நரம்புகள் தளர்ச்சியுற்று பல ஹீனப்பட்டுப் பலவகை நோய்கட்கு ஆட்பட்டுத்தவிக்கும் மனிதர்க்கு அமிர்த சஞ்சீவி போன்றது இயற்கையிலேயே உண்டாகிற அசல் 'ஸிலாஜித்' டானிக் (ஒன்றே) என்பதை எல்லா டாக்டர்களும், வைத்தியர்களும், பிறரும் ஒத்துக்கொள்ளுகின்றனர். ஆகவே கீழ்க்கண்டமுறைப்படி அதை உபயோகித்து வருவோர் ஆண், பெண் இருபாலரில் எந்த வயதினராயினும் இழந்துபோன பலத்தையும் ஆரோக்யத்தையும் மீளவும் பெறுவார் என்பது உறுதி. எங்களிடம் கிடைக்கும்படியான அசல் ஸிலாஜித் என்னும் (டானிக்கை) படுக்கை சமயத்தில் சுமார் 2-குண்டுமணி எடை எடுத்து அதை அழாக்கு காய்ச்சின சூடான பாலுடன் கலக்கி, சிறிது சர்க்கரையும் சேர்த்து சாப்பிட்டுவந்தால் சரீரத்தின் நரம்புகளுக்கும், எலும்பிற்கும் பலத்தைக்கொடுப்பதோடு தாதுவைக் குணப்படுத்தும். நீர் வியாதியையும் கபும்வைத் தன்மையையும் நீக்கி சரீரத்திற்கு பலத்தையும் சௌகரியத்தையும் கொடுக்கும். பத்தியமில்லை. ஆண் பெண் இருதாத்தாரும் உபயோகிக்கலாம்.

40-நாளைக்கு உபயோகமுள்ள புட்டி (1-க்கு) விலை ரூபா 1.

ஸ்ரீ:

உத்திரவாதமான

வைரங்கள் முதலிய ரத்தினங்களால் செய்த பொன், வெள்ளி நகைகளும், வெள்ளிப் பாத்திரங்களும், பெங்களூர், சேலம், மதுரை, காசி முதலிய பல ஊர் பட்டு, ஜவுளி தினுசுகளும் இங்கு கிடைக்கும்

தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கும்:—

V. ராமய்யங்கார்,
கவர்னிங் டைரக்டர்.

ஸ்ரீ ஆண்டாள்
ஜுவெல்லரீஸ் லிமிடெட்.
109, சைனுபஜார் ரோட்,
பைராகிமடம் கோவில் சமீபம்,
மதராஸ்

எல். ஜி.
L. G.

இந்த அடையாளமுள்ள
பெருங்காயம்
பார்த்து வாங்குங்கள்.

தங்கப் பதக்கங்கள் பெற்றது.

மணம், குணம், எல்லாம் உயர்ந்தது.

பவுன் ரூ. **1-14.**

சௌக்யத்திற்குச் சிறந்தது.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

லால்ஜி கோது அன் கம்பெனி,
சௌ[illegible] சென்னை.

தலைமை ஆபீஸ்: பம்பாய் (3)

கிளை: கும்பகோணம்.

ஸமாசாரங்கள்:

திருப்பதிமலையில் ஸ்ரீ அஹோபில மடம்.

" திருப்பதி மலையில் ஸ்ரீ அஹோபில மடத்திற்கென ஒரு தனிக்கட்டட மில்லாமலிருந்து. அஹோபிலமடம் ஆஸ்தானுதிபதிகளான ஸ்ரீ அழகிய சிங்கர் இப்பொழுது அக்குறையை நீக்கி ஒரு பெரிய கட்டிடம் கட்ட நியமனம்செய்து அதற்காக மிகுந்த திரவியமுமளித்தார். கட்டிடம் இப்பொழுது பூர்த்தியாகி சென்ற திங்கள்கிழமை மடத்தில் எழுந்தருளப்பண்ணப்பட்டிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மன் முதலிய மூர்த்திகளுக்கு ஸம்ப்ரோக்ஷணமும் விமரிசையாக நடத்தப்பட்டது. ஐந்து தினங்கள் முன்னதாக ஸம்ப்ரோக்ஷணத்தை முன்னிட்டு பல சிஷ்யர்களும் மற்றவர்களும் கூடியிருந்தனர். வேதபாராயணம் முதலியன மிகுந்த சிரத்தையுடன் நடத்தப்பட்டன. கட்டிடம் மிகவும் விசாலமாயும், திருப்பதி செல்லும் யாத்ரீகர்களுக்குச் சவுகரியமாகப் பல அறைகள் கூடியதாகவுமிருக்கிறது. ஸ்ரீ அழகிய சிங்கர் கிருபையுடன் அளித்த ரூ. 40000 இக் கட்டிடத்திற்காகச் செலவிடப் பட்டிருக்கிறது. இது தென்னாட்டிலிருந்து செல்லும் யாத்திரீகர்களுக்கு அதிக சவுகரியமாக விருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தை அனுசரித்து சென்னைக் கிரிஸ்தியன் ஸெண்டிரல் பாங்கி மானேஜரும் எல். என். கன்பெக்ஷனரி மானேஜிங் டைரக்டருமான ஸ்ரீமான் எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் கட்டிடவேலையை நேரில் கவனித்து சீக்கிரத்தில் திறமையாகவும் சிக்கனமாகவும் பூர்த்திசெய்தது பாராட்டத்தக்கது.

யதீந்த்ரமததீபிகை:— இது ஸ்ரீ-உப-வே V. K. ராமானுஜாசார்யரால் எழுதப்பட்ட தெளிவான தமிழுரை, விரிவான குறிப்புகள், 16-அனுபந்தங்கள் ஆகிய இவைகளுடன் கூடினது; ஸ்ரீவிசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தை எளிதாகவும் சுருக்கமாகவும் அறிந்துகொள்வதற்கு இன்றியமையாதது; இதில் பிரமாணங்களைப்பற்றிய மூன்று அவதாரங்களும் பிரமேயங்களைப்பற்றிய ஏழு அவதாரங்களும் இருக்கின்றன. அழகாய் நல்ல பயிண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 4

மானேஜர், ஸ்ரீ கோமளாம்பா பிரஸ், கும்பகோணம்.

Registered No. M. 3343

எல்லோருக்கும்
ஆரோக்கியத்தைக்
கொடுக்கக்கூடியது.

எங்களின்

'ஜே' மிஸ்கி

பெருங்காயம்

எங்கும் கிடைக்கும்.

நல்லெண்ணை.

சுத்தமான காயவைத்த, வெள்ளை எள்ளை ஆட்டி எடுத்த கலப்பில்லாத எண்ணை.

இது தேகத்திற்கும், கண்களுக்கும், ஆரோக்யம் தரத் தரமுள்ளது. வடமொழியில் "ஸ்நேஹ" மென்று பெயர் வைத்தது இதற்கே பொருந்தும்.

குழந்தைகளுக்குக் கண்களில் கட்டக்கூடியது.

A. M. சஞ்சீவிராய செட்டியார்,
29, கெங்காதீச்வரர்கோயில் தெரு,
புரசவாக்கம் — சென்னை.

Printer:— M. K. Parthasarathi Iyengar,
Sri Komalamba Press, Kumbakonam.
Edited and Published at Srirangam by A.V. Gopalachariar,
for the Sri Desika Srisukthi Samrakshana Sabha, Srirangam